www.padippakam.com

# உறவு

(மார்க்சிய தத்துவ இதழ்)

இதழ் - 7 ஜூலை 1999 ரூ. 7-00



கருணா மனோகரனின் -

## "மார்க்சிய கோட்பாடும் இன்றைய உலகமும்"

- எனும் கட்டுரைக்கு

எதிர்வினை



படிப்பகம்

www.padippakam.com

அன்பு வாசகர் தோழர்களே,

புரட்சிகர வணக்கங்கள்! உறவு நீண்ட இடைவெளிவிட்டு வருகிறது. காரணம் "படைப்பில்" ஏற்பட்ட தாமதமே.

உறவு தொடங்கப்பட்டதிலிருந்து இன்றுவரை பார்த்தால் வாசகர் எண்ணிக்கை கூடியுள்ளது. இதை உள்ளடக்கம் குறித்த கடிதங்கள், வாழ்த்துக்கள் மற்றும் விமர்சனங்கள் உறுதிப்படுத்துகிறது.

தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் எண்ணற்ற தோழர்கள், "இதழ் பெரிய எண்ணிக்கையில் வரவேண்டும். சந்தாவை நிர்ணயம் செய்யுங்கள். பணம் அனுப்புகிறோம்" என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வாசக தோழர்களின் வேண்டுகோள் நீண்ட பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கு காரணம் இதழ் தொடங்கி நடத்த முடியுமா? சாத்தியமாகுமா? எனத் தயக்கமிருந்தது.

ஆகவேதான், உறவு ஆரம்பத்தில் இதழாக இல்லாமல் தனி வெளியீடாக வந்தது. தோழர்களின் பேராதரவில் பின்னர் இதழாக மாற்றினோம். ஆனபோதிலும், வாசகர்களின் ஆர்வம், தேவை நிறைவேற்றப்படாத ஒன்றாகவே இருந்தது. மேலும் இதழ் எண்ணிக்கையை கூட்டுவது படைப்புகளைத் தொடர்ச்சியாக கொண்டு வருவது, தொடர்ந்து வரும்வகையில் சந்தா வாங்குவது எனப் பல்வேறு தயக்கங்களை எல்லாம் மீறி முடிவு செய்தோம். அதன்படி இவ்விதழ் புதிய பொலிவோடு அதிகப் பிரதிகளுடன், அச்சில் வருகிறது. 'உறவு'ன் வாழ்வும் வளர்ச்சியும் உங்கள் கையில்....

– ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

# கருணாமனோகரனின் 'மார்க்சிய கோட்பாடும் இன்றைய உலகமும்' எனும் கட்டுரைக்கு எதிர்வினை

சமீபத்தில் வெளியான நூல்களில் முக்கியமானது, கோவை ஞானியின் தொகுப்பான "மார்க்சியத்தின் எதிர்காலம்" எனும் நூலாகும். இதில் அவர் பலருடைய கட்டுரைகளை தொகுத்து இடம்பெற செய்து இருக்கிறார். இது பாராட்டுக்குரியது; வரவேற்கத்தக்கது. அத்தொகுப்பில் காணப்படும் கட்டுரைகளில் மிக முக்கியமானது தோழர் கருணா மனோகரனின் கட்டுரை.

தோழர் கருணாமனோகரன் தனது கட்டுரைக்கு "மார்க்சியக் கோட்பாடும் இன்றைய உலகமும்" எனும் பெயரிட்டுள்ளார்.மேலும் அத்தலைப்பின் கீழ் ஐந்து உபதலைப்புகளாக பிரித்து பல்வேறு விசயங்கள் குறித்து கருத்துச் செறிவான முறையில் நறுக்குத்தெறித்தால் போன்ற வடிவத்தில் தமது கண்ணோட்டத்தை மார்க்சியக் கண்ணோட்டம் தான் என நிறுவ முயன்றுள்ளார். அதே நேரத்தில் யதார்த்த சமுதாயத்தில் நிலவும் பொதுவுடமை இயக்கங்கள், குழுக்கள் எல்லாவற்றிலிருந்தும் கூட தன்னை வேறுபடுத்திக் காட்டத் தயங்கவில்லை.

அதே நேரத்தில் பொதுவுடமைக் கட்சிகள் - குழுக்கள் கண்ணோட்டத்தில்-நிலைப்பாடுகளில் "உறவு"க்கு முழுமையாக உடன்பாடு இல்லை. இதை கடந்த உறவு இதழ்களில் பல்வேறு கட்டுரைகள் கடிதங்களில் முன் வைத்துள்ளோம். குறிப்பாகச் சொன்னால் உறவு - 2, 4, 6, இதழ்களில் தோழர் அ. மார்க்சின் கண்ணோட்டத்திற்கு விமர்சனத்தை வெளியிட்டுள்ளோம். மேலும் தோழர் எல்.ஜி.யெஸ்க்கு உறவு- 3ம் இதழிலும், நந்தனின் பூர்வீக இனவாத அரசியலுக்கு உறவு-5லும் விமர்சனம் முன்வைத்துள்ளோம். மார்க்சின் கண்ணோட்டத்தை காலச்சூழலுக்கு ஏற்ப நடைமுறைக்கு வழிகாட்டியாக வளர்த்தெடுப்பதை தமது கடமையாக பொதுவுடமை இயக்கங்கள், குழுக்கள் கவனம் கொள்ளவில்லை; மாறாக எந்த ஒரு பிரச்னை குறித்தும் கருத்துச் சொல்லாமல் அலட்சியமாக ஒதுக்குவதில் தான் கவனமாக உள்ளனர். எனவே தான் மார்க்சின் உலகப் பார்வையை முரணற்ற விதத்தில் வளர்த்தெடுக்க வேண்டும் என்றபடி தம்மாலியன்ற முயற்சியில் மார்க்சியக் கண்டோட்டத்தில் எழுதப்பட்டது தான் என் முன் வைக்கும் புத்தகங்கள் கட்டுரைகள் குறித்து கருத்து தெரிவிப்பதை விவாதத்தை முன் எடுத்துச் செல்வதை "உறவு" தனது முக்கியப் பணியாக கருதுகிறது. அந்தவிதத்தில் தான் தோழர். கருணாமனோகரன் கட்டுரை குறித்த விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

பொதுவாகவே மார்க்சின் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தை அனைவருமே ஏற்றுக்கொள்வர். அதே போலவே தோழர் கருணாமனோகரனும் விதிவிலக்காக இல்லை; இதை அவர் அக்கட்டுரையின் துவக்கத்தில் எழுதுகிறார். "மனித வரலாற்றை தீர்மானிப்பது மனிதர்களே" என்ற கருத்தடிப்படையை உலகவரலாற்றில் நிலை நிறுத்தியது என்கிறார் "மார்க்சின் இயங்கியல் சிந்தனையை ஒருவர் ஏற்றுக் கொள்வது வேறு; ஒவ்வொரு துறைக்கும் அதைப்பொருத்திச் செயல்படுத்துவது வேறு" என்பார் எங்கெல்ஸ் இக்கூற்றை கணக்கில் கொண்டால் கருணாமனோகரன் சிந்தனை முறை எத்தகையது என பார்ப்பது அவசியம். அவர் எவ்வளவு தான் தனது கண்ணோட்டம் மார்க்சியம் தான் என்றாலும் அதை வெறுமனே ஏற்றுக் கொள்ள இயலாது. மாறாக அவை நடைமுறை யதார்த்தத்துக்கு பொருந்தக்கூடியது தானா? என்பதை மார்க்சின் கண்ணோட்டத்தில் ஆய்வு வழியில் முடிவை வந்தடைய வேண்டும். இதன் படி மார்க்சின் இயற்கை, சமுதாய வளர்ச்சி பற்றிய கண்ணோட்டத்தை சுருக்கமாக பார்ப்பது அவசியம்; அதே நேரத்தில் இக்கட்டுரையில் மார்க்சின் இயற்கை குறித்த



படிப்பகம்

www.padippakam.com

கண்ணோட்டம் குறித்து எந்தவிதமான முரண்பட்ட கருத்தும் இல்லை; சமுதாயவளர்ச்சி பற்றியே பேசப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 1. இயற்கையின் வரலாற்றிலிருந்து சமுதாய வரலாறு குறித்த மார்க்சின் கண்ணோட்டம்

பொதுவாக இயற்கையின் வரலாற்றிற்கும் மனிதசமுதாய வரலாற்றிற்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு. அதாவது சமுதாய வரலாறு என்பது உணர்வுபூர்வமான இயக்கமாகும். ஆனால் இயற்கையின் வரலாறு உணர்வுபூர்வமற்ற இயக்கமாகும். எனவே நாம் உணர்வுப்பூர்வமான சமுதாய வரலாறு குறித்து அறியும் முன் அதற்கு முன்னோடியாக அமையும் இயற்கையின் வரலாறு குறித்து அறிவது நல்லது. ஏனென்றால் மனிதனுக்கு முந்தியும் கூட இயற்கை இருந்தது என்று நாம் ஒப்புக்கொள்கிறோம்.

இயற்கையின் பரிணாம வரலாற்றை விளக்கினால் சாராம்சமாக கிடைக்கும் உண்மையை சுருங்கச் சொல்வோம். நாம் வாழும் சூரிய மண்டல குடும்பமும் சரி, அதன் அங்கமாக அமையும் நாம் வாழும் பூமியும் சரி, இந்தப் பூமியில் உயிரின சமூகத்தின் ஆதிகாலத் தோற்றுவாயாக அமையும், ஒரு செல் உயிரியின் தோற்றமும் சரி (அதில் கூட விலங்கின வகை, தாவர வகை உண்டு என அறிகிறோம்) ஏன் அந்த ஒரு செல் உயிர் தோற்றத்திற்கு அடிப்படையாக அமையும் புரோட்டோ பிளாசம் உருப்பெற்றதும் சரி, அதன் தொடர்ச்சியாக நீர், நில வாழ்வன, ஊர்வன, பறப்பன மற்றும் பாலூட்டி வரையிலான விலங்கினத்தின் தோற்றமும் சரி, அதற்கும் உச்சபட்சமாக , பாலூட்டி வகையான குரங்கிலிருந்து மனிதன் தோற்றம் வரை.... சுருக்கமாகச் சொன்னால் உயிரின ஜீவராசிகள் தோற்றத்திற்கு ஒரு "படைப்பாளன்" (கடவுள்) தான் காரணம் என முடிவுக்கு வர (நமக்குத் தெரிந்த விஞ்ஞானங்களின் வழியே என நாம் சொல்லக்கூடும்) எந்த ஆதாரமும் இல்லை.

இயற்கையில் பூமியின் தோற்றம் முதல் உயிர் ஜீவராசிகள் தோற்றம் வரை, ஒன்றிலிருந்து ஒன்றாகவோ அல்லது பலவாகவோ தான் வளர்ச்சி பெற்று வந்ததாக தெரிகிறது. குறிப்பாச் சொன்னால் உயிரினத் தோற்றம் குறித்து டார்வினின் பரிணாமத் தத்துவம் விளக்குகிறது. இந்த டார்வினின் தத்துவத்தை மெய்ப்பிக்கும் வகையில் பல்வேறு உயிர் ஜீவராசிகளுக்கு இடையே ஒன்றுக்கொன்று தொடர்புடைய மற்றும் மிக மிக நுணுக்கமான அளவில் மாறுபட்ட இடைப்பட்ட உயிரினங்களையும் கூட நவீன விஞ்ஞானம் அடையாளம் காட்டி வருகிறது.

எனவே இயற்கையின் வரலாற்றில் உச்சப்பட்சமாக தோன்றிய மனிதனே தனக்கு முன்னர் உணர்வுபூர்வமான சக்தியின் படைப்பே இயற்கை-மனிதன்-சமுதாயம் எனக் கருதுவது ஒரு புனைவானது. இந்த புனைவான கருத்தே சாமான்ய மொழியில் சொன்னால் கடவுள் எனப்படும். இக்கருத்து இயற்கையின் பரிணாம வரலாற்றை மறுப்பது மட்டுமல்லாமல், குருட்டுத்தனமான நம்பிக்கையும் ஆகிறது. இந்த குருட்டுத்தனமான நம்பிக்கை தவறானது என்று இயற்கையின் பரிணாம வரலாறு பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் நாளும் நிரூபிக்கின்றன; புதிய விஞ்ஞானத்துறைகளாகவும் பரிணாமம் பெற்றுள்ளன. இதன் விளைவாக நம்மிடம் படிந்துள்ள குருட்டுத்தனமான கருத்துக்களை மாற்றிக் கொள்ளத் தூண்டுகின்றன.

என்ற போதிலும், யதார்த்தத்தில் இயற்கை-மனிதன் தோற்றம் குறித்த கருத்துக்கள் விஞ்ஞானிகளிடையே நிலவிவருவதும் காணாமல் இருக்க முடியாது. இதைக் கணக்கில்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டுதான் எங்கெல்ஸ் கூறினார். "ஒவ்வொரு விஞ்ஞானியும் தனது துறைக்கு அப்பால் ஒரு கற்றுக்குட்டியே" என்றார். இது இன்றைக்கும் கூட பொருந்தும்

அதே நேரத்தில் விஞ்ஞானங்களின் வளர்ச்சியும் சரி, விஞ்ஞானங்களின் விஞ்ஞானமான... தத்துவ ஞானமும் சரி, இயற்கை-மனிதன்-சமுதாயம் தோற்றம் குறித்த தவறான கருத்தியல்களை – மதநம்பிக்கைளை சென்ற நூற்றாண்டே சாராம்சமாக விடுவித்துவிட்டது. என்றாலும், தவறான கருத்தியல்கள் இன்னும் கூட மக்களின் மனங்களிலிருந்து விடுதலை பெறுவது மிதமான வேகத்திலே தான் நடந்தேறி வருகிறது. இதற்கு இன்றைய பொருள் உற்பத்தி முறையும், அதன் வெளிப்பாடான வர்க்கங்களும் அந்த வர்க்கங்களின் உள்நோக்கமுடைய உணர்வுபூர்வமான நடவடிக்கைகளும் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், விஞ்ஞானங்களின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக இருக்கும் இன்றைய சூழலிலேயே தவறான கருத்துப் போக்குகள் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்த இடமிருக்கிறது என்றால் விஞ்ஞான வளர்ச்சி பெறாத காலத்தில் தவறான கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்த நியாயம் உண்டு.

இயற்கையின் பரிணாம வரலாறு குறித்து (மனிதன் தோற்றம் வரை) சுருக்கமாகச் சொன்னால் பின்வருமாறு இருக்கும். இயற்கையில் கோள்களின் தோற்றம், உயிர் ஜீவராசிகள் தோற்றம், மற்றும் வளர்ச்சி, மாற்றம் என்பவை எல்லாமே ஒன்றின் மீது ஒன்று செயல் புரியும் குருட்டுப்போக்கான சக்திகளின் தற்செயலான நிகழ்வுகளின் தொகுப்பாகவே உள்ளது. இந்த குருட்டுப்போக்கான சக்திகளின் பரஸ்பர செயல்பாட்டின் உயர்ந்தபட்ச விளையாகவே பூமியில் உயிரின பரிணாம வளர்ச்சியின் இறுதியாக மனிதன் தோன்றி உள்ளான். உணர்வு பூர்வமற்ற இயற்கையின் இயக்கத்திலிருந்து தான் உணர்வுபூர்வமான இயற்கையின்... வரலாறு தொடங்குவதாகிறது. எனவே இயற்கையின் வரலாற்றில் மனிதன் நீங்கலாக உணர்வுபூர்வமான நடவடிக்கை இருப்பதற்கான ஆதாரம் இன்றுவரை இல்லை; ஆகவே மனிதனின் சிந்தனை மற்றும் செயலுமே இயற்கையின் வரலாற்றில் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளாக இருக்கின்றன.

இந்த அர்த்தத்தில் பார்த்தால் எங்கெல்ஸ் ஒரு முறை கூறியது காணத்தக்கது. இது காணும் உலகம் உணர்வுபூர்வமான சக்தியின் கீழ் தான் இயங்கி வந்தது, வருகிறது எனக் கருதுவது கருத்து முதல் வாதம். ஆனால், உலகம் இனிமேல் தான் உணர்வு பூர்வமான சிந்தனை அமைப்பின் கீழ் வர இருக்கிறது என்பது பொருள் முதல் வாதமாகும். இது கருத்து முதல் வாதம், பொருள் முதல் வாதம் என்பதற்கு இடையிலான உச்சபட்ச வேறுபாடாகும் என்பது தெளிவு.

**(1)**

இயற்கையின் வரலாற்றில் இறுதியாக மனிதனும் அவனது செயல்களுமே உணர்வுபூர்வமான நடவடிக்கைகளாக இருக்கிறது எனக் கண்டோம். மனிதன் விலங்கின ஜீவராசி வழி வந்தவன். மனிதனை விலங்கினங்களிடமிருந்து வேறுபடுத்துவது அவனது சிந்தனையும் செயலுமே ஆகும். இதிலும் கூட மனிதனது சிந்தனை முந்தியா இல்லை செயல் முந்தியா என கேள்வி எழாமல் இல்லை. இது முட்டையிலிருந்து குஞ்சா, இல்லை குஞ்சின் வளர்ச்சியிலிருந்து முட்டையா எனும்... கேள்விக்கு ஒப்பாகும். உயிரின பரிணாம வளர்ச்சியை ஏற்றுக் கொள்ளும் நாம் எது முந்தி என்பதை விட ஒவ்வொரு கட்டத்திலும் இதில் ஏதோ ஒன்று முதன்மையாக இருக்கிறது என்று மட்டும் அறிகிறோம். ஆகவே மனிதனது செயல் முந்தியா சிந்தனை முந்தியா எனப் பார்ப்பதும் கூட தவறானதாகும். ஏனென்றால் மனித உடலிருந்து சிந்தனையை பிரிக்க இயலாது. மனித உடலின் உயர்ந்தபட்ச உற்பத்திப் பொருள் தான் மூளையாகும். இந்த மூளையின் செயல் தான் சிந்தனையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு சிந்திக்கவும் அதன்படி செயல்படவும் முயலும் மனிதன் விலங்கினங்களிடமிருந்து வேறுபடுத்தும் உயர்ந்த பட்ச செயலாக உழைப்பு பங்குவகிக்கிறது. இந்த உழைப்பே விலங்கினங்களிடமிருந்தும் மனித குரங்கிலிருந்தும் மென்மேலும் வேறுபடுத்தும் செயலாவதால் மனிதனை மனிதனாக்கியதும் உழைப்பே என்றாகிறது. இத்தகைய பரிணாம வளர்ச்சியை அறிய வேண்டுமானால் பேராசான் எங்கெல்ஸின் "மனித குரங்கிலிருந்து மனிதனாக மாறிய இடைநிலைப்படியில் உழைப்பின் பாத்திரம்" எனும் கட்டுரையை படிக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இக்கட்டுரையை எங்கெல்ஸ் எழுதி முடிக்காமலே காலமாகிவிட்டார். அதில் மனித சமூதாய வரலாற்றில் தோன்றிய சுரண்டலின் மூன்று அடிப்படை வடிவங்கள் குறித்து விரிவாக எழுத உத்தேசித்திருந்தார். இந்த மூன்று வடிவங்கள் என்பதும் மார்க்சும்-எங்கெல்சும் எழுதிய ஜெர்மன் சித்தாந்தம் எனும் நூலில் காட்டிய மூன்று வேறுபட்ட அடிப்படைகளைத் தான் எனக் கருதவும் வாய்ப்புண்டு.

மனித குரங்கிலிருந்து மனிதனாக மாறும் நிகழ்வில் உழைப்பு பிரதான பங்கு வகிப்பதால், அந்த உழைப்பும் கூட தனிப்பட்ட உழைப்பாக இல்லாமல் கூட்டான உழைப்பாக இருந்தால் மட்டுமே இயற்கையின் சீற்றங்களான, புயல், மழை, மற்றும் பருவ மாறுதல்களுக்கு ஏற்ப தற்காத்துக் கொள்வதும், விலங்கினங்களிடமிருந்து தற்காத்துக் கொள்வதும் முடியும். எனவே கூட்டாக வாழ்வது-உறவை ஏற்படுத்திக் கொண்டது-சமுதாயமாக வாழதொடங்கியதும் இயற்கையின் வரலாற்றில் உணர்வுபூர்வமான நடவடிக்கையின் வளர்ச்சியாகும்.

இவ்வாறு மனிதர்கள் ஆதிகாலத்தில் சமுதாயமாக ஒருங்கிணைந்து வாழ்ந்து வந்ததை வரலாற்று வழியில் கண்டுபிடித்த அறிஞர்தான் மார்கன். இக்கண்டுபிடிப்பை தெரிவிக்கும் புகழ் பெற்ற நூல்தான் "பண்டைக்கால சமுதாயம்" எனும் நூலாகும். மார்கனின் இந்த கண்டு பிடிப்பு எங்கெல்ஸ் ஒரு முறை கூறியது போல மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தில் விஞ்ஞானத்தில் உபரிமதிப்பு பற்றிய கண்டுபிடிப்புக்கு ஒப்பாகும். இது இந்த ஆதிகால சமுதாய அமைப்பே கணச்சமுதாயம் ஆகும். இச்சமுக அமைப்பில் ஆதியில் ஆணாதிக்கம் இல்லை; சுரண்டல் இல்லை; சுருக்கமாகச் சொன்னால் ஏற்றத்தாழ்வுகள் இல்லை; நிலம் யாருக்கும் சொந்தமாக இல்லை. உற்பத்திக் கருவிகள் எந்தத் தனிநபருக்கும் உடைமையாக இல்லை. இத்தகைய சமுதாயக் கட்டத்தில் பொருள் உற்பத்தியானது, வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கிழங்கு, பழம் சேகரிதல், உயர்ந்த பட்சத்தில் மிருகங்களை பழக்குதல், இதனிலும் உயர்ந்தபட்சத்தில் விவசாயம் செய்வதாகவும் இருந்தது. ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த அளவு உழைத்தனர்; தங்களுக்கு தேவைப்பட்ட அளவு எந்தவித வேறுபாடும் இல்லாமல் உழைப்பின் விளைபொருளை பகிர்ந்துகொண்டனர்.

இத்தகைய கணச்சமுதாய அமைப்பு மனித சமுதாய வளர்ச்சியில் எங்கும் உருவானது; பொதுவானது. இத்தகைய அமைப்பின் கீழ் மனிதர்கள் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திருந்தனர். இந்த அமைப்பை ஒவ்வொரு நாட்டின் மானுடவியலாளர்களின் தொல் சமுதாய ஆய்வு முடிவுகள் உண்மையென நிரூபிக்கின்றன. மார்க்சின் கண்டுபிடிப்பு மகத்தான ஒன்று தான் என பறைசாற்றுகின்றனர். அதே நேரத்தில் மார்கன் கணச்சமுதாய அமைப்பை கண்டு பிடிக்கும் முன்னரே மார்க்சும் எங்கெல்சும் இத்தகைய அமைப்பு இருந்திருக்க வேண்டும் என தொலைநோக்கோடு சொன்னதும் நாம் மறந்து விடக்கூடிய ஒன்றல்ல. இது குறித்த மார்க்ஸ்-எங்கெல்ஸின் எழுத்தில் அறிய வேண்டுமெனில் அவர்கள் 1848ம் ஆண்டுகளில் எழுதிய கட்சி அறிக்கையிலும் ஜெர்மன் சித்தாந்தம் எனும் நூலிலும் படித்தறியலாம்.

**(2)**

உயிரின பரிணாம வளர்ச்சியின் தத்துவத்தை முன் வைத்தவர் டார்வின். அவர்



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பாக விலங்கினங்கள் வளர்ச்சி பெற்ற வரலாறு குறித்து சாரமாகச் சொன்னார். "பிழைக்கத் தகுந்தன பிழைக்கும்" என்பதாகவே இருந்தது. இக்கூற்று விலங்கினங்களின் வளர்ச்சி பெற்று வந்த கட்டத்தை மட்டும் குறிப்பதல்ல; மாறாக மனிதன் தோற்றம் எடுத்த காலத்திற்கும், ஏன் மனிதர்கள் சமுதாயமாக வாழத்தொடங்கிய கட்டத்திற்கும் பொருந்தக்கூடியதே. மனிதன் விலங்கினங்களிடமிருந்து எவ்வளவு தான் வேறுபட்டாலும் அவனிடம் விலங்கினப் பண்புகள் போகவில்லை.. இதையே தான் மனித சமுதாயத்திலும் கூட பிழைக்கத் தகுந்த மனிதர்கள் பிழைப்பர் என்றபடி ஏழை பணக்காரன் எனும் வர்க்கப்பாகுபாடுகள் தோன்றியது. இந்த வர்க்கப்பாகுபாடுகள் தோன்றும் காலத்திற்கு முந்தியே ஆணாதிக்கமும் தோன்றி நிலை பெறுவதாயிற்று. சமுதாயத்தில் வர்க்கங்கள் தோன்றியதற்கு காரணம் குறித்து எங்கெல்ஸ் எழுதினார். "பொருள் உற்பத்தியின் வளர்ச்சிப்போக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையின் விளைவே வர்க்கங்களாகும்.." கணிதயவியலில் வர்க்கங்கள் உருவாக்கப்பட்டது மனித நலன்களை முன்னிட்டு உருவானது. ஆனால் மனித சமுதாயத்தில் வர்க்கங்கள் உருவானது. நிலைபெற்றதற்கு காரணமே பொருள் உற்பத்தியின் வளர்ச்சிக்கு (மிகை உற்பத்திக்கு) ஒரு விதத்தில் தூண்டு விசையளித்தது எனலாம்.

மனித சமுதாயத்தின் விளை பொருள் உற்பத்தியின் பற்றாக்குறையின் விளைவாக எழுந்த வர்க்கங்கள், அந்தப் பற்றாக்குறையை போக்கவியலாத நிர்ப்பந்தம் தான் மதங்களின் பல்வேறுவிதமான போதனைகளுக்கு இடமளித்தது; ஊக்கமளித்தது. ஆகவே தான் சமுதாயத்தின் எற்றத்தாழ்வை, வர்க்க பேதங்கள் தோன்றி நிலை பெறுவதை, அதுவும் தலைமுறைக்குப் பின் தலைமுறையாக- கடவுளின் படைப்பு என்ற புனைவும் அவசியப்பட்டது. இந்த அவசியம் வலியோர்க்கு - ஆளும் வர்க்க நலனுக்கு உகந்ததாகவும் ஆளப்படும். வர்க்கத்திற்கு பாதகமாகவும், விளக்கமளிக்கும் சூழலை உருவாக்கியது. இந்தப் புனைவை ஒரு சில தனி மனிதர்கள் விரும்பினாலும் கூட அவர்கள் சமுதாயத்தின் குறிப்பிட்ட வர்க்க மேலாண்மை காரணமாக மீறமுடியாது போனது; சாராம்சமாக ஆளும் வர்க்கத்துடன் ஏதோ ஒரு வகையில் சமரசம் செய்வதிலே தான் முடிந்தது. ஆகவே சமுதாயத்தில் தோன்றிய வர்க்க பேதங்களும் கூட இயற்கையில் ஏற்படும் மாற்றத்தை போன்றே உணர்வின்றி நிலை பெற்றது என்றுதான் கருத வேண்டியுள்ளது.

சமுதயாத்தில் வர்க்க வேறுபாடுகள் தோன்றி நிலைபெற்றதைப் பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டத்தை அறிய விரும்பினால் குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் மற்றும் டூரிங்குக்கு மறுப்பு, ஜெர்மன் சித்தாந்தம், ராகுல்ஜியின வால்கா முதல் கங்கை வரை எனும் நூல்களை படிக்கலாம்.

மனித சமூகம் வர்க்கங்களாக பிளவுபடத்தொடங்கியது நாட்டிற்கு நாடு, தேசத்திற்கு தேசம், கண்டத்திற்கு கண்டம் வேறுபடுகிறது; இந்த வேறுபாட்டை நியாயப்படுத்துவதும் கூட இதற்கேற்றாற் போன்ற வடிவத்தை எடுப்பதாகியது. குறிப்பாகச் சொன்னால் அடிமைச் சமுதாயம் தோன்றி நிலை பெற்ற சூழலில் கிரேக்க அரிஸ்டாட்டில் எழுதினார். "ஆண்டான் ஆண்டானாகவும், அடிமை அடிமையாகவும் இருக்கக் காரணம் கடவுளின் படைப்பு என்று எழுதினார்." அவர்கருத்தில் அடிமைகள் மனிதர்களே அல்ல; மாறாக விலங்குகள் ஆகும். இந்தியாவில் சாதி பேதங்கள் தோன்றியதை நியாயப்படுத்துவதும் காணத் தக்கது. நான்கு வர்ணமும் அதற்கு கீழ்பட்ட பஞ்சமர் பிரிவும் பிரம்மாவால் படைக்கப்பட்டவர்கள்; அதிலும் பிறப்பு வழி குறித்தும் கூட மிகைப்படுத்தப்பட்ட உயர்வு நவிற்சியாக புனையப்பட்டதும் மறந்துவிட முடியாது. இவ்விரண்டு விதமான புனைவுக்கும் வேறுபாடு இருப்பினும் சாராம்ச்மாக பெருத்த



படிப்பகம்

www.padippakam.com

வேறுபாடு எதுவும் இல்லை எனலாம். கிரேக்கச் சமுதாயத்தில் வர்க்க வேறுபாடுகள் நன்கு முதிர்ச்சி அடைந்ததை காட்டுகிறது. இந்தியாவோ வளர்ச்சி பெறாத படிநிலை அமைப்பைக் கொண்டதை காட்டுகிறது.

கிரேக்க அடிமைச்சமுதாயம் தான் ஐரோப்பா முதலாளித்துவ வளர்ச்சி பெறக் காரணமாகியது. வளர்ச்சி பெறாத இந்தியா போன்ற நாடுகளே வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு அடிமையாக (காலனி) நாடாக மாற தூண்டு விசையானது. இதை வேறுவிதமானச் சொன்னால் ஐரோப்பிய சமூகம் தனி மனிதனை அடிமையாக நடத்துவதை ஒழிக்கும் முகமாக - பரிணாம வளர்ச்சியாகவே நாடுகளையே அடிமையாக நடத்தும் படியானது.

இத்தகைய வளர்ச்சி பெற்ற சமுதாயக் கட்டம் தான் முதலாளித்துவ சமுதாயமாகும். இந்த கட்டத்தில் ஆதீனமாக இருக்கும். முதலாளி வர்க்கம் நாளும் நீடிக்க வேண்டுமெனில், உற்பத்தி கருவிகளில் நாளும் மாற்றத்தை பேண வேண்டும்; இதனுடன் உற்பத்தி திறனில் உயர்வை உயர்த்தியாக வேண்டும், இதன் மூலம் உற்பத்தி உறவிலும் சமூக உறவிலும் மாற்றத்தை நாளும் கொண்டு வரும்படி நிர்பந்திக்கப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால் இதுகாறுமான சமுதாய வளர்ச்சிக் கட்டங்களை எல்லாம் விஞ்சிவிடும் அளவில் பிரம்மாண்டமான அளவில் உற்பத்தி சக்திகளை வளர்த்துச் செல்கிறது.

இந்த முதலாளித்துவ சமுதாயத்தில் மட்டுமே இதுகாறுமான சமுதாயக் கட்டத்தில் இருந்ததை விட சமுதாயத்தின் தேவைக்கும் அதிகமான பொருட்களை உற்பத்தி செய்யமுடிகிறது. ஆனால் அனைத்து குடிமகன்களுக்கும் இதை அது வழங்குவதில்லை; காரணம் உற்பத்தி சாதனங்களின் மீதான மேலாதிக்கமே ஆகும்.

ஆனபோதிலும், வர்க்கபேதங்கள் தோற்றத்திற்கு காரணமான பொருள் உற்பத்தியின் பற்றாக்குறை மறைந்து அந்த உற்பத்தியாகிறது; எனவே, இக்கட்டத்தில் வர்க்கபேதங்கள் நிலவுவதற்கான அடிப்படையை - சூழலை மாற்றும்படி சமுதாயத்தின் பெருந்திரள் - (பாட்டாளி வர்க்கம்) கொண்டுவர நிர்பந்தத்திற்குள்ளாகிறது. இதன் மூலம் மனிதனை மனிதன் சுரண்டுவதும், அனைத்துவிதமான ஆதிக்கமும், ஆணாதிக்கம் உட்பட மறைவதற்கான சூழலை தன்னகத்தே கொண்டுள்ளது. இதுவே மனித சமுதாயத்தில் நிலைபெற்ற "பிழைக்க தகுந்தவை பிழைக்கும்" என்றபடியான ஒரு வித விலங்கின உணர்வுகளிலிருந்து துண்டித்துக் கொண்டு மனிதனை மனிதனாக மதிக்கும் - நடத்தும் வரலாறு தொடங்குவதாக இருக்கும் இதுவே இயற்கை. சமுதாய வரலாற்றில் உச்ச பட்சமான உணர்வுபூர்வமான நடவடிக்கையை முன் கொண்டு செல்வதாகவும் இருக்கும்.

## 2. ஏகபோக முதலாளித்துவமா? -(அ) தொழில் நுட்பமுதலாளித்துவமா?

முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் - முதிர்ச்சி அடைந்த வர்க்க வேறுபாடுகளை அகற்றும் விமர்சனவாத நடை முறையே மார்க்சிய தத்துவமாகும். இதை வேறுவிதமாகச் சொன்னால் மார்க்சியத் தத்துவம் என்பது முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய விமர்சனமாகும். இவ்விமர்சனத்தை மார்க்சும் எங்கெல்சும் ஜெர்மன் சித்தாந்தம், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்னும் நூல்களில் துவக்கிவைத்தனர். இத்துவக்கத்திலேயே நடைமுறை வர்க்கப் போராட்டத்திற்கு தலைமை தாங்குவதாக இருந்தது. ஆகவே "எங்களது தத்துவம் செயலுக்கு வழிகாட்டியே தவிர வறட்டுச் சூத்திரமல்ல" என எழுத நேர்ந்தது எங்கெல்சுக்கு. அவர்கள் காலத்தில் ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்திற்கும், பிரான்சின் பாட்டாளி வர்க்க போராட்டத்திற்கும் குறிப்பாக தலைமை தாங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனாலும் புரட்சி வெற்ற பெறவில்லை. அதற்கான காரணங்கள் பலவாகும் அது குறித்து வேறொரு இடத்தில் பார்ப்போம்.

மார்க்ஸ் எங்கெல்ஸ் காட்டிய தத்துவம் எல்லா காலச்சூழலுக்கும் பொருந்தக்கூடிய வகையில் தீர்வை கொண்டதல்ல; மாறாக மாறுபட்ட காலச்சூழல்களுக்கும், ஒவ்வொரு நாடுகளுக்கும் ஏற்றாற் போல் நடைமுறையில் பயன்படுத்தும் வகையில் வழிமுறையை மட்டுமே வழங்குகிறது. இந்த வழி முறையை மார்க்ஸ் எங்கெல்ஸ் காலத்திற்கு பின்னர் லெனின் வளப்படுத்தினார். நடைமுறைக்கு வழி காட்டினார்.

லெனின் எவ்வாறு மார்க்ஸ் எங்கெல்ஸ் சகாப்தத்திற்கு மாறுபட்டார் எனக் காண்பது முக்கியம்; அதே போல் தோழர் கருணா மனோகரன் லெனின் சகாப்தத்திலிருந்து மாறு பட்ட இன்றைய சகாப்தம் பற்றி கூறுவது குறித்து பரிசீலிக்கத்தக்கது. எனவே மார்க்ஸ் எங்கெல்ஸ் காலந்தொட்டு இன்றைய சகாப்தம் வரை சுருக்கமாகப்பார்ப்பது அவசியம்

மார்க்ஸ் எங்கெல்ஸ் காலத்திய முதலாளித்துவம் தொழில்துறை முதலாளித்துவமாகும். இந்த தொழில் துறை முதலாளித்துவ வளர்ச்சியும் உலகில் ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபட்ட கால அளவுகள் எடுத்துக் கொண்டன என்று மார்க்சும் எங்கெல்சும் வெளிப்படுத்தினர். இதை குறிப்பாகச் சொன்னால் இத்தாலிக்கு 600க்கும் மேற்பட்ட வருடங்களும். பிரிட்டனுக்கு 400 வருடங்களும் பிரான்சுக்கு 200 வருடங்களும் பிடித்தன. ஆஸ்திரேலியாவும் அமெரிக்காவும் கண்டு பிடிக்கப் பட்டவுடன் ஐரோப்பியர் குடியேற்றத்தின் விளைவாக அடிப்படையிலிருந்தே முதலாளித்துவ நாடுகளாக பரிணமித்தன என்றும் அறிகிறோம். இதைக் கணக்கில் கொண்டால் தெரிய வரும் உண்மை. உலகில் முதலாளிவர்க்கத்தின் வளர்ச்சியின் வரலாறு தெரிவிப்பது (நாடு, தேசம், கண்டம் எனும் எல்லைகளைக் கடந்து பார்த்தால் என நாம் இங்கு சொல்லக்கூடும்) காலவரிசைப்படி பார்த்தால் குறுகிய கால அளவே எடுத்துள்ளது என அறியலாம். மேலும் இதற்கு கூடுதலான எடுப்பான வளர்ச்சியாக ருஷ்யாவை லெனின் உதாரணம் காட்டுகிறார். "அதாவது நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் கருப்பையிலிருந்து ஏகபோக முதலாளித்துவ நாடாக பரிணமிக்க – ருஷ்யாவிற்கு மிக மிக குறுகிய காலமாக 30 ஆண்டுகளே பிடித்தன".

மேலும் முதலாளித்துவ வர்க்கம் தான் வளர்ச்சிபெற்று தனது மேலாண்மையை நிறுவியதை நாடு, தேசம், கண்டம் எனும் எல்லைகளை நீக்கிப் பார்த்தால் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு வடிவங்களை முன் நிறுத்துவதாக உள்ளது. இவ்வாறு வெவ்வேறு வடிவங்கள் எடுக்கக் காரணம் நிலப்பிரபுத்துவ அமைப்பிலிருந்து கருக் கொண்டு உருக்கொண்டதைப் பொறுத்ததாகவே உள்ளது. எனவே முதலாளி வர்க்கம் தனக்குமுந்தைய ஆதீனமாகிய நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்தோ, அகற்றியோ தான் முதலாளித்துவ வர்க்க மேலாண்மை வரலாறு உள்ளது. முதலாளிவர்க்கம் புரட்சிகரமான முறையில் நிலப்பிரபு வர்க்கத்தை தூக்கியெறிந்து விட்டு மேலாதிக்கத்தை நிறுவியதற்கு உதாரணம் உலகவரலாற்றில் பிரான்சு நாடு தான் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. சமரசம் செய்து கொண்டதற்கான எடுப்பான உதாரணம் ஜெர்மன் நாடாகும். இங்கிலாந்தும் கூட ஒரு வகையில் இந்த வகையைச் சேர்ந்தது தான் என்றாலும் ஜெர்மனிலிருந்து அதன் வளர்ச்சியின் வரலாறு வேறுபட்டது. அதாவது இங்கிலாந்து நாட்டில் முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சி எங்கும் காண முடியாது சென்ற நூற்றாண்டு வரை. எனவே முதலாளி வர்க்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்றது; நிலவுடைமை வர்க்கம் கூட முதலாளிவர்க்கமாக பரிணமித்தது. இதன் எச்சொச்சமாகவே தான் பிரிட்டனில் முதலாளித்துவ குடியரசு நிலவினாலும், மன்னர், ராணிக்கும் கூட சம்பிரதாயபூர்வமான அதிகாரம் நிலவி வருகிறது. ஆனால் இதற்கு



படிப்பகம்

www.padippakam.com

மாறாக, ஜெர்மனில் முதலாளிவர்க்கம் நிலவுடமை வர்க்கத்தை எதிர்த்த போராட்டம் துங்கியது. இப்போராட்டம் "தத்துவஞான" வடிவத்தில் இருந்தது. ஆனால் இப்போராட்டம் உச்சகட்டத்தை அடையும் முன்பே பாட்டாளி வர்க்கம் தனது மேலாதிக்கத்திற்கான போராட்டத்தை துவக்கிவிட்டது. இதற்கு நாம் முன்பே கூறியது போல பிரான்சின் அனுபவத்தையும் கணக்கில் கொண்டவர்களாக மார்க்சும் எங்கெல்சும் வழிகாட்டினர். ஆகவே முதலாளிவர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை எதிர்கொள்ளும் பொருட்டு நிலவுடமை வர்க்கத்துடன் சமரசம் செய்து கொண்டது. இச்சமரசம் தான் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாட்டின் முதலாளி வர்க்கம் பின்னாளில் காலனிகளாக உலக நாடுகளை நடத்தும் சூழலில் அந்நாடுகளின் நிலவுடமை வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வதற்கான படிப்பினையாக இருந்தது. ஆனால் மார்க்சிய லெனினிய இயக்கங்களில், ஏகாதிபத்தியக் கட்டத்தில் இது நிகழ்ந்தது எனக் கருதுவதுவதே மேலோங்கியதாக உள்ளது; இதற்கு மாறாக தொழில் துறை முதலாளித்துவ சகாப்தத்திலேயே நடந்து விட்டது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

முதலாளித்துவ பொருள் உற்பத்திக்கு நாளும் விரிவடைந்து வரும் சந்தை அவசியம். இந்த அவசியம் தான் ஐரோப்பியர்களை ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்கான கடல்வழி காண தூண்டியது; புதிய கண்டங்களான, அமெரிக்க, ஆஸ்திரேலியா கண்டுபிடிக்க ஏதுவானது. இக்கண்டுபிடிப்பு தனது உற்பத்திப் பொருளுக்கான சந்தையை தேடிக் கொண்டதாக இருந்தது. தனது உற்பத்திப் பொருளுக்கான சந்தையைப் பெறுவது பல்வேறு நாடுகளின் முதலாளி வர்க்கத்திற்கு இடையேயான போட்டியையும் தூண்டிவிட்டது. எனவே முதலாளி வர்க்கம் தனது சந்தையை உத்தரவாதப் படுத்துவதற்கான முயற்சியே நாடுகளை காலனிகளாகவும் மாற்றத் தூண்டியது. இவ்வாறு முதலாளி வர்க்கம் காலனிகளாக மாற்றிக் கொள்வதே எதிர்கால நலன்களுக்கு உத்தரவாதமானதாக இருந்தது. முதலாளி வர்க்கம் உலகை காலனியாக மாற்றுவது தொடர்பாக ராணுவ உதவி தேவைப்பட்டது. இவ்வாற தேவைபட்ட சூழலில் முதலாளிவர்க்கம் தனது நாட்டில்அரசியல் வாதிகளிடம் ராணுவ உதவியை தனது கோரிக்கையாக முன் வைத்தது. இது நிலவுடமை வர்க்கம் மேலாதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளில் முதலாளி வர்க்கத்தின் கோரிக்கையை நிராகரித்தது; தேவையில்லாத ஒன்று என அறிவுறுத்தியதும் வரலாற்றில் காணத்தக்கது.

வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள் வளர்ச்சி பெறாத நாடுகளை காலனியாக்கியது. இது முதன்மையாக ராணுவ வலிமையின் மூலம் நடந்தேறியது. இது பின்னாளில் நிதி மூலதன ஏற்றுமதி மூலமும் சாத்தியப்பட்டது என்பதே லெனின் கருத்தாக இருந்தது. இவ்வாறு ராணுவ வலிமை, நிதி ஆதிக்கம் ஆகியவற்றின் மூலம் உலகை பங்கிடுவது காலனியாக்குவதே மார்க்ஸ் எங்கெல்ஸ் காலத்திலிருந்து முக்கியமாக வேறுபட்டதாக உள்ளது.

இவ்வாறு காலனி ஆக்கும் நிகழ்வு காலனி நாடுகளின் வர்க்கங்களை கிளர்ந்தெழச் செய்தது; அவ்வர்க்கங்களை அழிப்பதும் தமது எதிர்கால நலன்களுக்கு நல்லதல்ல. இதை 1857 நிகழ்ச்சி உலகிற்கு உணர்த்தியது. ஆகவே தான் காலனி நாடுகளில் நிலவுடமை வர்க்கம் முதலாளி வர்க்கங்களை தனக்கு கீழ்ப்பட்ட வர்க்கமாக வளர்த்தெடுத்தது. அதாவது தரகு நிலப்பிரபு, முதலாளி வர்க்கமாகும். இவ்வாறான போக்கு குறித்து மார்க்சும் எங்கெல்சும் வெளிப்படுத்தியிருக்கின்றனர்

முதலாளித்துவ வர்க்கங்களுக்கு இடையே மற்றும் சந்தையை பங்கிடுவது மற்றும் பாதுகாப்பது பற்றிய முரண்பட்ட அணிகளுக்கு இடையிலான யுத்தமே உலக யுத்தங்களாகும். இப்போக்கு 1898க்கும் 1908க்கும் இடையில் உருப்பெற்றதாகும்; இது



படிப்பகம்

www.padippakam.com

மார்கஸ் எங்கெல்ஸ் காலத்திலிருந்து மாறுபட்டது; அதுவே ஏகபோக முதலாளித்துவமாகும்.

ஆனால் இன்றைய சகாப்தம் குறித்து கருணாமனோகரன் கூறுகிறார்,

"மூன்றாம் உலக யுத்தத்திற்கான வாய்ப்பு இல்லை. யுத்தத்தின் மூலம் உலகை மறுபங்கீடு செய்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏகாதிபத்திய அரசியல் ஆளுமையை தொழில் நுட்பம் பறித்துக் கொண்டுவிட்டது. உயர் தொழில் நுட்பம் பல நாடுகளில் பரவிக்கிடக்கிறது."

...."சோசலிச முகாம், ஏகாதிபத்திய முகாம் என்ற முரண்பாடு இல்லை. அதாவது வல்லரசு அணிவகுப்பு என்பது இல்லை. நேட்டோ, வார்சா, சீட்டோ, சின்டோ கூட்டுச் சேரா இயக்கம் எதுவும் இல்லை. மூன்றுலக பகுப்பாய்வு இன்றைய உலகத்திற்கு எந்த வகையிலும் பொருத்தமாயில்லை.

"நாடுகள் அரசியல் எல்லைகளைத் தாண்டிக் கொண்டிருக்கின்றன. இன்றைய உலகில் பொருளாதாரத்திற்கோ எல்லைகளே இல்லை. எல்லா நாட்டு அரசுகளும் மூலதன நிர்வாகம், சமூகக் கட்டமைப்பு நிர்வாகமாக உருமாற்றம் பெற்றிருக்கிறது."

மேலே கண்ட கருத்துக்களை கணக்கில் கொண்டால் அதையும் சுருக்கமாகச் சொன்னால், முதலாளிவர்க்கத்தின் வளர்ச்சி நாடு, தேசம், கண்டம் என்ற எல்லைகளை தாண்டி உள்ளது; வளர்ச்சி பெற்ற நாடு, வளர்ச்சி பெறாத நாடு என்ற பாகுபாடும் சுருங்கி வருகிறது. வளர்ச்சி பெற்ற நாட்டு முதலாளி வர்க்கத்திற்கும் வளர்ச்சி காணும் நாட்டு முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் பகைமையான முரண்பாடு இல்லை; ஆனால் நிகழ் கால வாழ்வில் சுயநலன் பொருட்டு தற்காலிக முரண்பாடுகளே உள்ளது என்றாகிறது.

இதை சாத்தியப்படுத்தும் வகையில் தொழில் நுட்பம் வளர்ச்சி உள்ளது. இதன் மூலம் சோசலிச முகாம், ஏகாதி பத்திய முகாம் இல்லை; எனவே பல்வேறு முதலாளித்துவ நாடுகளான கூட்டமைப்பும் தேவையற்றதாகிறது. எனவே சந்தைக்கான - மறுபங்கீடு தொழில்நுட்பம் மூலம் நடந்தேறிக் கொண்டுள்ளது என்றாகிறது. ஆகவே உலக யுத்தமும் அவசியமற்றதாகிறது. இது உண்மையே! அதே நேரத்தில் சார்க், ஆசியா ஐரோப்பிய ஐக்கிய யூனியன் அமைப்புக்களை எப்படி பார்ப்பது? இவை 1985களுக்கு பின்னர் தோன்றியவை தானே? மேலும் இந்த அமைப்பின் தோற்றம் தானே நேட்டோ, வார்சா அமைப்புக்களை பெயரளவுக்கான ஒன்றாக்கியது? இது குறித்து கருணாமனோகரன் கண்டு கொள்ளாதது ஏனோ?

மேலும் கருணாமனோகரன் குறிப்பிடும் "இன்றைய உலகில் பொருளாதாரத்திற்கு எல்லைகளே இல்லை", என்றால் உலகம் ஒரே நாடாக மாறிக் கொண்டிருக்கிறது என்றுதானே பொருளாகும். ஆகவே தான் எல்லா நாட்டு அரசுகளும் மூலதன நிர்வாகம், சமூகக் கட்டமைப்பு நிர்வாகமாக உருமாற்றம் பெற்றிருக்கிறது" என தாங்கள் எழுத நேர்கிறது.

மேலும் இதற்குமாறாக வேறொரு இடத்தில் எழுதுவது கணக்கில் கொள்ளத்தக்கது.

"இன்று வளரும் நாடுகளின் வெவ்வேறு வளர்ச்சி மட்டத்தைக் காணும்போது மார்க்சிய வகைப்பட்ட வர்க்கப் பகுப்பாய்வு சாத்தியமா?" என்பது தாங்கள் முன்னர் கூறியதற்கு முரண்பாடாகும். அதாவது வளரும் நாடு, வளர்ச்சி பெற்ற நாடு என்ற பாகுபாடு மறைகிறது; காரணம் "இன்றைய உலகில் பொருளாதாரத்திற்கோ எல்லைகளே இல்லை" என்பதும் உண்மையே! அதுவும் தங்கள் கண்ணோட்டப்படி என்றாலும் வெவ்வேறு வளர்ச்சி மட்டம் காலப்போக்கில் வர்க்கப்பகுப்பாய்வு சாத்தியமில்லாதது



படிப்பகம்

www.padippakam.com

போய்விடும் என்பதை உள்ளியல்பாக கொண்டதாகிறது. அப்படியானால் இன்றைய உலகம் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவு கட்டுகிறதா? இதுவும் பாட்டாளி வர்க்கம் தலைமையேற்காமலே முதலாளிவர்க்கம் வர்க்கப்பகைமைகளுக்கு முடிவு கட்டும் வரலாற்றுப் பணியை செய்ய முடியுமா? எனவும் கேள்வி எழும். இன்றைய கட்டமாகிய தொழில் நுட்ப முதலாளித்துவம் வர்க்கப் பகைமையை அகற்றும் சாத்தியப்பாட்டை வழங்குகிறதா என்ற கேள்விக்கும் இடமளிக்கிறது.

ஆனால் நம் கருத்தில் வர்க்கங்கள் மறையவில்லை வர்க்கப் பகைமைகளும் மறையவில்லை. முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கத்தை (இன்று பாட்டாளி வர்க்கம் என்பது சலுகை பெற்ற வர்க்கமாகும்) உற்பத்தி சாதனங்களைக் கொண்டுதானே மேலாதிக்கம் செய்கிறது. மேலும் தங்கள் கருத்தில் "தொழில்நுட்பம்" என்பதும் கூட முதலாளி வர்க்கம் மேலாண்மையை நிறுவுவதற்கான கருவி என்பதால் தொழில் நுட்பமே ("அறிவே") சொத்தாகி விட்டது. இது மற்றைய முதலாளித்துவ கட்டங்களிலிருந்து வேறுபடுத்துவது தானே?

இந்த தொழில் நுட்ப மேலாண்மையை சாத்தியமாக்குவது காப்புரிமை குறித்த சட்டங்கள். இந்த காப்புரிமை, பொருள்களை செய்வதற்கான வழிமுறையை குறிக்கவில்லை; மாறாக செய்பொருளுக்கான உரிமையை வரையறுப்பதாகிறது. மேலும் மார்க்ஸ் காப்புரிமை தான் உலக சந்தையை முதலாளிவர்க்கம் நிறுவுவதற்காக அடிப்படையாகும் என்றதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

மேலும் இங்கு இன்னொன்றும் கவனத்தில் கொள்ளத்தக்கது. அதாவது முதலாளித்துவ வர்க்கம் காப்புரிமையை கைக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன? இந்த காப்புரிமை உலகில் பின்தங்கிய உற்பத்திமுறைகளை அழிப்பதைத்தானே நோக்கமாக கொண்டுள்ளது; அதனுடனே சந்தைப் பொருளாதாரத்தை லாப அடிப்படையில் கொண்டுவரும் செயலாகத் தானே பன்னாட்டுக் கம்பெனிகளின் செயல்கள் உள்ளன. இது உண்மையென்றால் ஏகாதிபத்தியம் இனிமேல் வளர்ச்சி பெறாது. காரணம் லெனின் கூறிய அந்திமக் கால முதலாளித்துவம் என்பது பொய்யா? எவ்வாறு? என கருணாமனோகரன் விளக்கமளிக்க வேண்டும். இதெல்லாம் கணக்கில் கொள்ளாததன் காரணமாகவே அவர் எழுதுகிறார். "உலகளாவிய ரீதியில் முதலாளியத்துவத்தால் உற்பத்திகளை மேலும் வளர்க்க முடியாத நெருக்கடி ஏற்படுமா என்பதே கேள்வி. இதை ஒட்டியே மூலதன சேகரிப்பிற்கான சாத்தியம் உலகில் இல்லாமல் போய்விடுமா என்ற கேள்வியும் எழுகிறது. இதற்கு யாராலும் விடையளிக்க முடியாது எனக் கருதுகிறேன்".

தோழர் கருணாமனோகரன் அவர்கள் இதுகாறும் சுற்றி வளைத்து பேசினார். ஆனால் மேலே கண்டவரியில் நேரடியாகவே சொல்லி விட்டார். அதாவது அவரைப் பொறுத்தவரை முதலாளிவர்க்கம் உற்பத்தி சக்திகளை மென்மேலும் வளர்க்கமுடியாத நெருக்கடி ஏற்படுமா? ஏற்படாதா? எனச் சொல்ல முடியாது என்கிறார். ஆனால் கருணாமனோகரன் சொல்லமுடியாது எனச் சொல்வதன் மூலம் அவர் முதலாளித்துவக் கண்ணோட்டத்திற்கு பலியாகிறார். முதலாளித்துவ உற்பத்திமுறையை ஏற்றுக் கொள்ள வேண்டும். பாட்டாளி வர்க்கம் அதற்கு கீழ்பட்டதாக இருக்க வேண்டும் எனும் போதனைக்கு இடமளிப்பதாகிறது.

மேலும் பன்னாட்டு முதலாளிகள் செயல்படுத்தும் பல்வேறு நாடுகளின் வர்க்கங்கள் அரசுகள் நடைமுறைப்படுத்தும் தாராளமயமாக்கல் "தனியார்மயமாக்கல்" உலகமயமாக்கல் என்பதும் கூட தங்களது நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை உலகெங்கும் பரஸ்பரம் மாற்றிக் கொள்வது தானே! இதன் விளைவாகத் தானே. ஈராக்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்னை யூகோஸ்லேவியா பிரச்னை, லிபியா மீதான பொருளாதாரத்தடை, கிழக்காசியாவில் நாணய வீழ்ச்சியைத் தொடர்ந்து அரசியல் பொருளாதார நெருக்கடி, இந்தியாவில் ஒரு கட்சி ஆட்சி வீழ்ச்சி அடைந்து கூட்டணி ஆட்சி வந்ததும் இதன் பின்விளைவாக, மத அடிப்படைவாதத்தை முன் வைத்து பா.ஜ.க. ஆட்சியை கைப்பற்றியது. இதனிலும் தொடர்ச்சியாக வளர்ந்துவரும் பொருளாதார நெருக்கடி என இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இப்பிரச்னைகள் எல்லாம் அடிப்படையாகப் பார்த்தால் பொருளாதார நலன்களை உட்கிடையாக கொண்ட வர்க்கங்களுக்கு இடையேயான போராட்டம் என்று தானே பார்க்க முடியும். இவை மார்க்சின் வர்க்கப் பகுப்பாய்வுக்கு அப்பாற்பட்டதா? மார்க்சின் வழிமுறையில் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவுகட்டுவது சாத்தியமில்லையா? எனவும் கேள்வி எழும்

தொழில் நுட்ப முதலாளித்துவம் என்பது ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் புதிய கட்டமாகும். அதாவது முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் புதிய கட்டமாகும்.அதாவது முதலாளித்துவம் உலகில் பின் தங்கிய உற்பத்திமுறையை அகற்றிவிட்டு சந்தைப் பொருளாதார அமைப்பை நிறுவுவதாகும். இந்த முதலாளித்துவ அமைப்பை எதிர்த்து நிற்கக்கூடிய சமூக சக்திகள் எதுவும் இல்லை; குறிப்பாக, பாட்டாளி வர்க்கம் புரட்சிகர குணாம்சம் கொண்டதாக இல்லாமல் பிரபுத்துவ பாட்டாளி வர்க்கமாக உள்ளது. ஆனால் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தை உருவாக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன. இதையே நம்போன்ற நாடுகளில் தனியார்மயமாக்கல் கொள்கை செயல்படுத்துவதன் பின் விளைவாக இருக்கும்.

மேலும் தொழில் நுட்ப முதலாளித்துவம் நாடு தேசம் கண்டம் எனும் எல்லைகடந்து உற்பத்தியை ஒன்று குவிப்பது மூலம் பாட்டாளி வர்க்கத்தையும் ஒன்று குவிக்கும். இதையே தான் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு, தொழிற்சாலைகளை மாற்றுவது . இதன் மூலம் உழைப்பை ஏனைய பண்டங்களைப்போல பண்டமாகிறது எனவும் காண முடியும்

"தாராளமயமாக்கல்" கொள்கையின் பின் விளைவாகவே நம் போன்ற நாடுகளில் சாதி, மதம், தேசம், இனம் எனும் சித்தாந்தங்களை உருவாக்கிக் கொண்டு பல்வேறு சமூகக் குழுக்கள் போராடுகின்றன. இக்குழுக்களின் நோக்கம் ஆட்சியதிகாரம் கோரும் போராட்டமாக இல்லை; மாறாக தங்களது பொருளாதார நலன்களை நிகழ்காலத்தில் தக்க வைத்துக் கொள்வதற்கான சலுகைகளை பெறுவதாக அமைந்துவிடுகின்றன.

இதுகாறும் பார்த்தவற்றிலிருந்து எதிர்கால உலகப்போக்கை நிர்ணயிக்க முடியும். அதாவது முதலாளித்துவம் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவு கட்ட வில்லை. மாறாக அது வர்க்க முரண்பாடுகளை கூர்மை அடையச் செய்யும். இதற்கு அடிப்படையாக உற்பத்தி சக்திகளை மென்மேலும் வளர்த்துச் செல்வது சாத்தியமற்றதாகும். இந்நிகழ் முறை துலக்கமாக தெரிவது வேண்டுமானால் காலத்தை மதிப்பீடுவதில் மாற்றுக் கருத்துக்கு வாய்ப்புண்டு. ஆனால் முதலாளித்துவம் மீண்டும், மீண்டும் நெருக்கடிக்குள்ளாகும் நிகழ்முறை மறையாமல் மேலும், மேலும் தீவிரம் அடையவே செய்யும். தனிச் சொத்துடமை இருக்கும் வரை....

## ஆ. புரட்சிக்கான திசைவழிகுறித்து

மார்க்ஸ்-எங்கெல்ஸ், தங்கள் காலத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது முதலாளித்துவம் வளர்ச்சிக் கட்டத்தை அடைந்த நாடுகளில் ஏக காலத்தில் நடக்கும் என்றனர். அதே நேரத்தில் பிரிட்டன் அது உலகில் தானே ஏகபோக சக்தியாக இருப்பதன் காரணமாக அங்கு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயல்பு மறைந்து குட்டி முதலாளித்துவத்தன்மை கொண்டதாயுள்ளது; அதாவது சலுகைபெற்ற பாட்டாளிவர்க்கமாக



படிப்பகம்

www.padippakam.com

உள்ளது என மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக்காட்டினர். இதையே லெனின் ஏகபோக முதலாளித்துவ சகாப்தத்தில் ஏகபோக முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலும் ஒரு போக்காக மாறி சந்தர்ப்பவாதம் தோன்றி வலுப்பெறும் வர்க்க வேரானது என்று காட்டியதும் நினைவில் கொள்ளத்தக்கது.

'ஏகபோக முதலாளித்துவ சகாப்தத்தில் முதலாளி வர்க்கம் தமது சந்தையின் பொருட்டு மூர்க்கதமான போட்டியில் இறங்குகிறது. இப்போட்டி உக்கிரமான கட்டத்தில் உலகயுத்தமாக மாறுகிறது. இந்த உலக யுத்தம் பாட்டாளிகளின் நலனுக்கானதல்ல; மாறாக முதலாளி வர்க்கத்தின் நலனுக்கானதாகும். எனவே பாட்டாளி வர்க்கமானது தன் நாட்டு முதலாளிவர்க்கம் உலகயுத்தத்தில் ஈடுபடாதவாறு உள்நாட்டு யுத்தத்தை துவக்க வேண்டும். மேலும் இந்தப் புரட்சியும் கூட முதலாளித்துவம் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒரே நேரத்தில் சாத்தியமல்ல; எங்கு ஏகபோக முதலாளித்துவமானது பலவீன கண்ணியாக உள்ளதோ அங்கு தான் சாத்தியம் என்றார் லெனின்.

லெனினது ஏகபோக முதலாளித்துவம் என்பது சரியல்ல; இது அதீத முதலாளித்துவம் என்றனர். இதை முக்கியமாக முன் வைத்தவர் கார்ல்காவுஸ்கி. "இச்சகாப்தத்தில் முதலாளித்துவமானது வர்க்கப்பகைமைகளை மட்டுப்படுத்தும் சட்டமாகும். சமுதாயத்தை சனநாயகமாக்குகிறது. காலனிகளால் நிதிமூலதனம் விரும்பி ஏற்கப்படுகிறது. முதலாளித்துவ வர்க்கங்களுக்கு இடையேயான போட்டி, உலக யுத்தமாக வராது. அப்படியே வந்தாலும் சமுதாயத்தின்-தேசத்தின் நலனை முன்னிட்டு ஆளும் வர்க்கத்தின் பின்னே நிற்க வேண்டும். மேலும், உலக யுத்தம் வருவதற்கான முதலாளித்து வர்க்கங்களுக்கு இடையே தயாரிப்பு ஏற்படுமானால் அதை தவிர்க்கலாம். என்றபடி ஐரோப்பிய ஐக்கி நாடுகள் என்ற அமைப்பு ஏற்படுத்த வேண்டும்." என்னும் கோரிக்கைகளை தொழிலாளி வர்க்கத்திரளிடம் பரப்பினர்.

லெனின் இத்தகைய வாதங்களுக்கு எல்லாம் பதில் எழுதினார். அதீத முதலாளித்துவம் என்பது பிரிட்டன் பொருளியல் அறிஞர் ஹாப்ஸன் எனும் முதலாளித்துவவாதி சொன்னதற்கும் மேலாக எதுவும் இல்லை. அவர் கூட இக்கட்டத்தில் வர்க்க முரண்பாடுகள் ஒழிந்து விடவில்லை என்று தான் ஒப்புக் கொள்கின்றார். ஆனால் கார்ல்காவுத்ஸ்கியோ வர்க்கப் பகைமைகளுக்கு முடிவுகட்டும் தருணமாக காண்கிறார். மேலும், ஏகாதிபத்திய யுத்தத்தில் ஆளும் வர்க்கத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்பது கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதமாகும் என்றார்.

"மேலும் ஐரோப்பிய ஐக்கிய நாடுகள என்பதும் என்ன நோக்கத்திற்காக? ஒரு வேளை முற்போக்கின் கோட்டையாகிய ருஷ்யாவை எதிர்த்தால் கூட வரவேற்கலாம் ஆனால் தனக்கு போட்டியாக அமெரிக்கவும், ஜப்பானும் வந்துவிடக் கூடாது என்ற அர்த்தத்திலே தான் அது யதார்த்தத்தில் பொருள் கொள்வதாகிறது. அதுவும் கூட தற்காலிகமாகவே, இருக்கும். சில ஆண்டுகள் வேண்டுமானால் நீடிக்கலாம். என்றாலும் முதலாளி வர்க்கங்களுக்கு இடையே முரண்பாடு முற்றும். மேலும், தொழிலாளி வர்க்க கட்சிகளே இதை இலட்சிய முழக்கமாக முன் வைப்பது பொருந்தாது. பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய குணாம்சத்தை அழித்து விடும்; வெகுமக்களை குழப்பத்தில் ஆழ்த்திவிடும். மேலும் இரு காரணங்கள் முதன்மை பெறகிறது. அதாவது, முதலாவதாக தனி நாட்டில் புரட்சி வெற்றி பெறாது எனும் கருத்தை நாமே முன் கொண்டு செல்வதாகிவிடும். இரண்டாவதாக, இலட்சியமுழக்கம் என்ற வகையில் இதற்கும் சோசலிப்புரட்சிக்கும் (சோசலிச அமைப்புக்கும்) இடையிலான வேறுபாட்டை துலக்கமாக காட்டுவது சிரமம். எனவே ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் என்பது சரியல்ல; ஆதரிக்கவும் கூடாது" என்றால் லெனின்.



படிப்பகம்

www.padippakam.com

வரலாறு லெனினது கருத்தை ஏகாதிபத்திய சகாப்தத்தை சரி என நிரூபித்து விட்டது. ருஷ்யாவில் புரட்சியும் வெற்றி பெற்றது.: இவ்வெற்றியும். அவர் கருத்தில் ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றியதன் மூலம் தான் சாதிக்கப்பட்டது. கார்ல் காவுத்ஸ்கியின் வாதம் தவறானது; சந்தர்ப்பவாதமானது. இச்சந்தர்ப்பவாதம் காவுத்ஸ்கி வடிவில் தோன்ற சலுகை பெற்ற பாட்டாளி வர்க்கமும் காரணம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதையே "சமூக தேசிய வெறி" என்றும் "சமூக ஏகாதிபத்தியவாதிகள்" என்றும் அழைக்க நேர்ந்தது லெனினுக்கு.

லெனின் காட்டிய வழியில் ருஷ்யப்புரட்சி மட்டுமல்லாது சீனப்புரட்சியும் நடந்தேறியது. ருஷ்யாவே பொது எதிரி என்ற முதலாளித்துவ அணி தோன்றியது. சோலிச முகாம். ஏகாதிபத்திய முகாம் என உலகம் இரண்டுபட்டது. வல்லரசு நாடுகளும் தோன்றியது.மேலும் ருஷ்யாவும் வர்க்கப் பகைமைகளை மறையச் செய்யாமல் அதை வளர்த்தெடுப்பதாகியது. இந்த இருமுகாம்களுக்கு நடுவனாக ஐ.நா. சபை தோன்றியது. ஏகாதிபத்தியம் உலக யுத்தத்தின் மூலமான சந்தையைப் பங்கீடு, மாறி ஒப்பந்தங்கள் வாயிலாகவோ, அல்லது, அதிகாரவர்க்கங்களை அப்படியே அணிசேர்ப்பதன் வாயிலாகவோ நடந்தேறியதும். இதுவே 1985-க்கு பின்னர் ரஷ்யாவும் தகர்ந்தது. முதலாளித்துவ பாதையை நோக்கி அடியெடுத்து வைத்தது. இதற்கு சீனாவும் தயாரானது.

மேலும் ஐரோப்பிய ஐக்கிய நாடுகள், சார்க், ஆசியா, மத்தியத்தரைக்கடல் நாடுகளின் கூட்டமைப்புக்கள் உலகில் தோன்றின. இது தோழர் லெனினால் சாத்தியமில்லை என்று சொல்லப்பட்டது. இன்று முதலாளித்துவ அணிகளால் அவசியம் என்ற விதத்தில் உருவாகி உள்ளது.

உற்பத்தியின் ஒன்று குவிப்பைப் போலவே தொழிலாளி வர்க்கத்தையும் ஒன்று குவிக்கிறது. நிதி ஆதிக்கக் கும்பல்கள் பொருள் உற்பத்தியில் ஈடுபடாமலே தொழில் நுட்ப வல்லுநர்களை கொண்டே, தொழில் நுட்பத்தால் உலகின் பொருள் உற்பத்தியை சந்தையை பெறுவதாகிறது. இதன் மூலம் நாடு, தேசம், கண்டம் என எல்லைகளை மறையச் செய்கிறது. இது காறும் நாடு தேசம் எனும் பசப்பு மொழிகளின் வாயிலாக முதலாளி வர்க்கம் அரசியல் அரங்கில் தனக்கு கீழ் பட்ட வர்க்கங்களை ஏமாற்ற முடியாது. உலகையே சந்தை பொருளாதார அமைப்பாக மாற்றவும் அதாவது உலகச் சந்தையை நிறுவுவதை நோக்கி நடை போடுகிறது. பிற்பட்ட வர்க்கங்களை, (நிலவுடமை வர்க்கத்தை) அழிக்கும் விதமாக ஏகாதிபத்தியக் கட்டத்தை விட மோசமான அந்திமக்காலத்தை எதிர் நோக்குகிறது முதலாளிவர்க்கம். தனக்கு எதிரான எந்தச் செயலையும் கடுமையாக ஒடுக்குகிறது. இதற்கான வழிவகைகளையும் அது செய்து வருகிறது. எனவே லெனின் காட்டியது போல தனிநாடுகளில் புரட்சி வெற்றி பெறுவது நினைத்துக் கூட பார்க்க முடியாதது. ஆனால் உலகில் பல்வேற நாடுகளில் ஏககாலத்தில் புரட்சி நடைபெறுவதாக இருக்கும். மேலும், புரட்சிக்கான சூழல் நாடு, தேசம் என்ற பாகுபாடு இல்லாமல் உலகெங்குமே நிலவுகிறது. ஆனால் தோழர் கருணா மனோகரன் எந்த திசைவழியையும் காட்டாமல் மௌனம் சாதிக்கிறார்.

## 3. கருணாமனோகரன் பார்வையில் ரஷ்யப் புரட்சியும் தோழர் லெனின் மீதான விமர்சனமும்

தோழர் கருணாமனேகரன் எழுதுகிறார்.

"தன்னியல்பான வரலாற்றுப் போக்கில் உணர்வுபூர்வமாகச் செயல்படுவதற்கே சித்தாந்தங்களும் அமைப்புக்களும் தேவைப்படுகின்றன. ஆனால் லெனின் பார்வையில்



படிப்பகம்

www.padippakam.com

கட்சி, கருத்துக்கள், அரசு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. தன்னியல்பான அம்சம் எனப்படும் மக்களின் நடவடிக்கைகள், உணர்வும் மட்டம், சிந்தனை ஆகியவை முக்கியத்துவம் பெறுவதில்லை."

இது உண்மையே! அதே நேரத்தில் மேலும் அவர் எழுதுகிறார்.

"தன்னியல்பான வளர்ச்சிப்போக்கே உணர்வுபூர்வமான அம்சத்தை தீர்மானிக்கும், உணர்வுபூர்வமான அம்சத்தைக் கொண்டு ஒரு போதும் வரலாற்றைத் தீர்மானிக்க முடியாது. தீர்மானிக்க முடியாது என்பது தான் முக்கியம் அதுவே இயக்கவியல்".

மேலே நாம் கண்ட முதற்பாராவில் (மேற்கோளில்) சரியான கண்ணோட்டத்தை தருகிறது. ஆனால் இரண்டாவதாக காட்டும் மேற்கோளில் அதற்கு எதிரிடையான பொருளைத் தருகிறது எனக் காண முடியும் யாரும்!

அதாவது மார்சியத் தத்துவத்தின் உயிரான பிரதிபலிப்புக் கொள்கையை கேள்விக்குள்ளாக்குகிறது. தன்னியல்பான அம்சத்தின் சாராம்சமான பிம்பமே உணர்வுபூர்வமான அம்சமாகும். இதற்கு உ-ம் சொன்னால்... ஒரு பொருளின் அனைத்துக் கூறுகளையும் தெரிந்து கொண்டால் பொருளையே தெரிந்தவர்களாவோம். இவ்வாறான அறிந்துணருதலுக்குப்பின், இந்தப் புரிதலுக்கு அடிப்படையான பொருள் நமக்கு புறத்தே நிலவுகிறது எனச் சொல்லலாமே தவிர பெரிதாக வேறொன்றும் (முரண்பாடாக) சொல்வதற்கில்லை. மேலும் அப்பொருள் விநாடிக்கு விநாடி மாறிக் கொண்டு தான் உள்ளது என்பதை நாம் மறப்பதற்கில்லை. ஏனென்றால் அம்மாற்றம் அற்ப அளவானது பண்பளவான மாற்றம் பெறவில்லை, எனவே நம் முடிவு தற்போது சரியானது. இந்த அற்ப அளவான மாற்றமும் வளர்ச்சி பெறும்பட்சத்தில் பண்பளவில் மாற்றம் கொண்டு வரும். நமது முடிவும் கூட மாறுபடக்கூடும் என்பதையும் மறப்பதில்லை. இதன்மூலம் உண்மை என்பதும், முடிவு என்பதும், குறிப்பிட்ட கட்டத்தை அடிப்படையாக கொண்டது. எல்லாக் காலங்களுக்கும் இறுதியானதாக கொண்டதல்ல.

மேலும் தன்னியல்பான உணர்வின் அம்சத்தை உணர்வு பூர்வமான அம்சம் எவ்வகையில் கணக்கில் கொள்ளவில்லை எனக்காட்ட வேண்டும். இதற்கு மாறாக, தன்னியல்பான அம்சத்திற்கு எதிராக உணர்வுபூர்வமான அம்சத்தை நிறுத்த முடியாது. மாறாக பார்ப்பது மனித உடலிலிருந்து மனித சிந்தனையை வேறுபடுத்திப் பார்ப்பதற்கு ஒப்பாகும். எனவே லெனின் அன்றைய மக்கள் திரளின் தன்னியல்பான நடவடிக்கையை எந்தவிதத்தில் கணக்கில் எடுக்கவில்லை. இதன் காரணமாகவே தான் பின்னாளில் (லெனினுக்கு பின்னர்) மாற்றம் ஏற்பட்டது எனக்கூறலாம். இதற்கு மாறாக அன்றைய லெனின் நடவடிக்கைகள் தவறு எனச் சொல்லமுடியாது. ஏனென்றால் ஒவ்வொரு கட்டமும் மனித சமுதாய வரலாற்றில் தவிர்க்க இயலாதது; அக்கட்டத்தின் அவசியமாகவே தனிநபர்கள் நடவடிக்கைகள் அமைகின்றன. அதே நேரத்தில் அந்தத் தனிநபர்கள் தனது வாழ்க்கையில் சமுதாயப் பணியை தற்செயலான வடிவத்திலே தான் வந்தடைகிறார்கள் செயல்படுகிறார்கள். இந்தப்படியே தான் லெனினது நடவடிக்கைகள் அமைந்திருந்தன. எனவே நடைபெற்ற பின்னடைவுக்கு அளவுக்கு அதிகமான லெனினை குற்றம் சாட்ட முடியாது; அன்றைய சூழல்கள் ஏன் அத்தகைய நடைமுறைக்கு வாய்ப்பு அளித்தன எனக் காண வேண்டும் என்பதும் தெளிவு.

மேலும் இங்கு இன்னொன்றும் நினைவில் கொள்ளத்தக்கது. கட்சி, அரசு, கருத்துக்கள் சமுதாய மாற்றத்திற்கு எவ்வளவு அவசியப்பட்டன என்பதை முதன்மையாக வலியுறுத்தியவர் லெனின் அல்ல மாறாக, அவருக்கும் நமக்கும் ஆசான்களாகிய மார்க்சும் எங்கெல்சுமே ஆவர். இதை பாரீஸ்கம்யூன் மற்றும் ஜெர்மன் பாட்டாளி



படிப்பகம்

www.padippakam.com

வர்க்க எழுச்சிகளின் அனுபவங்களிலிருந்து வடித்தெடுத்தனர். இதிலும் குறிப்பாக பாரீஸ்கம்யூன் தோற்றதற்கு காரணம் என்ன? அவர்களே கூறினர். எல்லா நேரங்களிலும் பாட்டாளிவர்க்கத்திற்கு வழிகாட்டக்கூடிய தலைமை தாங்கக் கூடிய கட்சி இல்லை. மேலும் பழைய அரசு எந்திரத்தை பாட்டாளி வர்க்கம் அப்படியே பயன்படுத்த முடியாது. மாறாக, புதிதாக உருவாக்க வேண்டும் என்றனர். இதன் வழியே தான் செர்மனில் ஐஸனாக் வாதிகள், லஸ்ஸால்வாதிகளை இணைத்து செர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். அதற்கு வேலைத்திட்டத்தையும் மார்க்ஸ் (கோத்த வேலைத் திட்டம்) வரைந்தளித்தார்.

கட்சியானது தொழிலாளி வர்க்கத்தினரிடையே தத்துவத்தை (உணர்வுபூர்வமான குறிக்கோளை அடைய) எலும்பும் சதையும் போல பேண வேண்டும். இல்லையெனில் பாட்டாளிவர்க்கம் எதிர்காலத்தைப்பற்றிய தத்துவார்த்த அறிவை இயல்பிலேயே பெற்றுவிடும் என்றாகும் அவ்வாறு நடக்கும் எனில் கருத்துகள் கட்சி-அரசு குறித்த முக்கியத்துவம் அளிக்க வேண்டிய தேவை கம்யூனிஸ்டுகளுக்கு இல்லாது போய்விடும்.

இன்றைய நோக்கில் ரஷ்யப்புரட்சி பின்னடைவை சந்தித்து விட்டது அதன் குறிக்கோளுக்கு மாறான விளைவுகளை வந்தடைந்துள்ளது எனவே புரட்சியே தவறு எனச் சொல்லமுடியாது ஏனென்றால் ரஷ்யப்புரட்சி உலகெங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள், தொழிலாளி வர்க்கத்திரள் மத்தியில் ஏற்படுத்திய உணர்வின் அலையை - வேட்கையை சிறுமைப்படுத்துவதாகிவிடும். அதே நேரத்தில் ரஷ்யப் புரட்சிக்கு பின் ஏற்பட்ட பின்னடைவு செயல்பாடு குறித்து நமக்கும் கூட விமர்சனங்கள் உண்டு ஒரு தலைமுறையைச் சேர்ந்தவர்கள் சில தப்படிகளை முன்னோக்கி வைக்கிறார்கள். அதன் தவறுகளை கணக்கில் கொண்டு பின்னர் வரும் தலை முறையினர் சில தப்படிகளை முன்னோக்கி வைக்கிறார்கள் இவ்வாறு தான் வரலாறு உள்ளது.

நல்லது என்ற கருதும் சூழலில் தீய அம்சங்களும் கூறுகளும் இருக்கின்றன என்றபோதிலும். நல்லது என்பது தனது தோற்ற காலத்தை முன்னிட்டு தீய அம்சத்தையும் மீறி பெரும்பான்மையாக நல்லது சரியானது. ஆனால் வளர்ச்சிப்போக்கில் நல்லது என நாம் நினைத்ததும் கூட தீய அம்சமாகிறது. ஆகவே நல்லது கெட்டது என்பது அந்தந்த சூழல்களைப் பொறுத்தது. அதற்குமேல் அல்ல என்பதும் தெளிவு.

இந்த விதத்தில் சமுதாய வரலாற்றில் கட்சியின் முக்கியத்துவம் குறித்த லெனின் கருத்துக்களும் எனலாம். இதற்கு மாறாக லெனின் தவறு செய்து விட்டார் எனச்சொல்வது, லெனின் குற்றம் அல்ல. மாறாக, மார்க்சு-எங்கெல்ஸ் குற்றம் என்று தான் கருத வேண்டும். ஆனால் கருணாமனோகரன் லெனினை குற்றம் சாட்டுவது பொருத்தமற்றது மட்டுமல்ல; மார்க்ஸ் எங்கெல்சை குற்றம் சுமத்த முடியாததற்கு காரணம் அவரது பலவீனத்தை காட்டுகிறதா? இல்லை மரியாதையைக் காட்டுகிறதா என்பதை அவரே முடிவு செய்யட்டும்.

புரட்சிக்கு பின்னரான காலத்தில் கட்சியின் அரசியல் செயல்பாடு குறித்து இத்தொகுப்பில் தோழர் தியாகு காட்டும் உண்மைகள் கவனம் கொள்ளத் தக்கது பாராட்டத்தக்கது சரியானது. மேலும் இங்கு வாசகருக்கு நினைவூட்டுகிறோம். தோழர் அ.மார்க்ஸ் கருத்துக்களும் இதே மாதிரியானதே கருணாமனோகரனுடன் ஒத்துப்போகக் கூடியதே. பார்க்க உறவு-4.

மேலும் தொடர்வோம்! தோழர் கருணாமனோகரன் இவ்வாறு உணர்வுபூர்வமான அம்சத்தைப்பற்றி தவறாக விளக்கமளிப்பது ஒன்றும் புதிதல்ல மாறாக பழையதே குறிப்பாகச் சொன்னால் தோழர் லெனின் மீது விமர்சனத்தை அவர் சம காலத்தவரே



படிப்பகம்

www.padippakam.com

முன்வைத்துள்ளனர். அது எவ்விதத்தில் சரியானது தவறானது என்ற லெனின் பதில் அளித்துள்ளார். அதற்கு எந்தவிதத்திலும் மாறுபாடானதல்ல கருணாமனோகரன் கருத்தும் கண்ணோட்டமும். இதற்கு லெனினது "என்ன செய்ய வேண்டும்" எனும் நூலிலிருந்து நீண்ட மேற்கோளை முன்வைக்கிறோம்.

லெனின் மீது விமர்சனமாக ரபோச்சிஸே தேலோ இதழ் எழுதியது.

"இஸ்க்ரா (லெனினது இதழ்) தன்னியல்பான போராட்டங்களை சிறுமைப்படுத்துகிறது...."

மேலும் "இஸ்க்ரா அகநிலைத் திட்டங்களையே முன்வைக்கிறது" என்றனர்.

இதற்கு பதிலாக லெனின் எழுதுகிறார்.

"அகநிலைத் திட்டங்களைத் தீட்டுபவர் எப்படி புறநிலை வளர்ச்சியை சிறுமைப்படுத்தக்கூடும்... திட்டங்களை தீட்டுகிறவர் அப்படிச் செய்திருந்தால் அவர் குற்றம் தன்னியல்பான அம்சத்தை சிறுமைப்படுத்தினார் என்பதல்ல மாறாக உணர்வுபூர்வமான அம்சத்தை சிறுமைப்படுத்தினார் என்று தான் இருக்கும். காரணம் புறநிலை வளர்ச்சியை முறையாகப் புரிந்து கொள்வதற்குத் தனக்கு "உணர்வு" இல்லை என்று அவர் காட்டிக் கொள்வார்..... இஸ்கராவின் அகநிலைத்திட்டங்கள் தவறானவை என்ற அவர் நினைத்தால் அவை என்ன புறநிலைமைகளைப் புறக்கணித்திருக்கின்றன எனக் காட்ட வேண்டும். அதன் பிறகே அவற்றைப் புறக்கணிப்பதில் இஸ்க்ராவுக்கு அரசியல் உணர்வு இல்லை யென்னும் .....

நாம் முன்னர் காட்டிய விமர்சனபூர்வமான கருத்துக்கள் சரி என்றாகிறது; தோழர் கருணாமனோகரன், உணர்வுபூர்வமான அம்சத்தை சிறுமைப்படுத்துகிறார் என்றாகிறது. மேலும் ரபோச்சியோதேலோ முன் வைத்த மென்ஷிவிக் நிலைப்பாட்டையே கருணாமனோகரன் மேற்கொள்கிறார் என்றாகிறது. மேலும் அவர் கண்ணோட்டம் தவறு என்பதற்கு கூடுதலான சான்று காட்டும் செயலாகவே மார்க்ஸின் "அரசியல் பொருளாதார விமர்சன கருத்துரை" எனம் நூலிலிருந்து மேற்கொள் காட்டுகிறார் தவறாகவும் விளக்கமளிக்கிறார் அதோடு மட்டுமல்லாமல், தோழர் கருணாமனோகரன் எழுதுகிறார், "கம்யூனிஸ்டுகளின் வரலாற்றுப் பாத்திரம் என்னவென்றால் புதிய உற்பத்தி சக்திகளின் அளவியல் வளர்ச்சிக்கு ஏற்ப புதிய உற்பத்தி உறவுகளை அளவியல் ரீதியில் உருவாக்கப் போராடுவதாகும். இதன் போக்கிலேயே புரட்சிக்கு அதாவது புதிய உற்பத்தி முறைக்கு மக்களைத் தயார்படுத்துவதாகும்".

மார்க்சின் தத்துவஞானம் - இயற்கை, சமுதாயம் மற்றும் ஒவ்வொரு அறிவுத்துறை செயல்துறை நடவடிக்கைக்கும் பொருந்தக் கூடியதே! இதை கருணாமனோகரனும் ஒப்புக் கொள்வார் என நம்புகிறோம். மாற்றம் என்பது (பண்புரீதியாக) குறித்து எங்கெல்ஸ் எழுதினார். "கூடுதல் அல்லது குறைதல் மூலம் அளவு பண்பாக மாறுவதே என்கிறார். உம். நீர் பனிக்கட்டியாக மாறுதல் சூடேற்றப்பட்ட நீர் ஆவியாதல்".

இது சமுதாய மாற்றத்திற்கும் - புரட்சிகர நடவடிக்கைக்கும் பொருந்தும். அளவு ரீதியான மாற்றமே புரட்சியாகும் என்பது அப்பட்டமான தவறாகும். ஆகவே தான் அவர் அக்டோபர் புரட்சியை குறை சொல்லும் நிலைக்கு ஆளாகிறார். அதாவது கேரென்ஸ்கி அரசாங்கத்தை எதிர்த்து போல்ஷிவிக்குகள் அக்டோபர் புரட்சியை தொடர்வதற்கு-அதுவும் சில மாதங்களில் தொடர்வதற்கு சமுதாயத்தில் என்ன பௌதீக மாற்றம் நடந்து விட்டது எனக் கேட்கும் நிலைக்கு ஆளாகிறார்.

தோழர் கருணாமனோகரன் அவர்களே! மென்ஷிவிசம் குறித்தும் - தோழர்



படிப்பகம்

www.padippakam.com

பிளெகாநவ் அக்டோபர் புரட்சி குறித்தும் கொண்டிருந்த தவறான கருத்துக்களுக்கு காரணம் என்ன என்று லெனின் காட்டியதை மறந்துவிட்டீர்களா? பிளெகானவ் ருஷ்யாவில் தொழிலாளிவர்க்கம் சமுதாய மாற்றத்தை சோசலிசப் புரட்சியை நடத்தும் பக்குவம் பெறவில்லை என்பதும் விவசாயிகள் அதற்கு துணையாக செயலாற்றுவதை பற்றி தவறான அபிப்ராயம் கொண்டிருந்தார். என்றாலும் ருஷ்யப்புரட்சி நடைபெற தூண்டுகோளாக தனிமனிதர் என்ற வகையில் பிளெகானவ் ஆற்றிய பணி மனித சமுதாயத்தில் மறக்கவியலாது என்றார்.

ருஷ்யப்புரட்சி நடந்தது குறிப்பிடத்தக்க அளவில் மனித சமுதாயத்துக்கு படிப்பினையும் வழங்கிவிட்டது. அதன் படிப்பினைகளிலிருந்து முன்னேற்றப்படியாக செயலுக்கு வழிகாட்டுவதைவிடுத்து அளவுக்கு அதிகமான விமர்சனம் செய்வது சரியல்ல. மேலும் அது மனிதர்களின் உணர்வு பூர்வமான மாற்றத்தை - நடவடிக்கைகளை சிறுமைப்படுத்துவது மட்டுமல்ல மாறாக, உள்நோக்கமுடைய செயலாகவும் கருத இடமுள்ளது. மேலும் லெனின் காலத்தில் வேண்டுமானால் இந்தக் கருத்து தவறு என்றாலும் அதற்கு உண்டு. ஆனால் இன்றைய நோக்கில் அது குறித்துச் சொல்வது ருஷ்யாவின் மாற்றம் உலகில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி தவறாக மதிப்பீடு செய்வதாகி விடும். இன்றைய நடைமுறைக்கு இலட்சிய வகையில் ருஷ்யாவை காட்டுவதற்கு சாத்தியமற்றதாகும்.

மேலும் தோழர் கருணாமனோகரன் அவர்களே! லெனினுக்கும் நமக்கும் ஆசானாகிய மார்க்சின் பதினெட்டாம் புருமெர் என்ற நூலிலும், எங்கெல்ஸின் செர்மன் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் என்ற நூலிலும் காட்டியது நோக்கத்தக்கது.

"சமுதாய வரலாற்றின் உச்சகட்டத்தில் எந்த மிதவாதியும் இந்தப்பக்கம் அல்லது அந்தப்பக்கம் எனும் நிலைக்கு தள்ளப்படுகிறார் நடுநிலை என்பது இல்லாது போகிறது". மேலும் "புரட்சிகரமான காலப்பகுதியில் மக்கள் ஒரு நூற்றாண்டில் தெரிந்து கொள்ள வேண்டிய விசயங்களை ஒரு சில ஆண்டுகளில் தெரிந்து கொள்கிறார்கள்".

இதே கருத்தைத் தானே லெனின் இடதுசாரி கம்யூனிசமும் இளம்பருவக் கோளாறு எனும் நூலில் எழுதினார்.

அக்டோபர் புரட்சி வெற்றி பெற முக்கியக் காரணம், உலக யுத்தத்தில் ஈடுபட்ட படைப்பிரிவினரில் பாதிக்கும் மேற்பட்டோர் ஆதரிக்கும் நிலைக்கும், விவசாயிகளில் பெரும் பகுதியினர் ஆதரவையும் ஒரு சில மாதங்களில் பெற முடிந்ததே என்றார். இதை தனிப்பட்ட லெனினது நடவடிக்கையாக கூறிவிட முடியாது. சுருக்கவும் முடியாது. இதற்கு மாறாக கருதுவது மக்கள்திரள் நடவடிக்கையை -வரலாற்றை புரிந்து கொள்ளாதது தான் என சொல்லவும் வேண்டுமோ?

## 4. சமுதாய வரலாற்றில் புரட்சியாளர் / குறிக்கோளும் செயலும்

மனித சமுதாயத்தில் நடைபெறும் எந்தச் சிறு நிகழ்வும் அந்தக் குறிப்பிட்ட கட்டத்தின் உணர்வு பூர்வமான நடவடிக்கையே ஆகும். வர்க்க சமுதாயத்தில் ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை அடக்கியாளும் நடவடிக்கையே உணர்வு பூர்வமான அம்சம் என்பது உள்ளியல்பாக கொண்டுள்ளது. இதுகாறுமான வரலாற்றில் மற்றெல்லா வர்க்கங்களும் அதாவது பாட்டாளிவர்க்கம் நீங்கலாக சொத்துடமை வடிவத்தை கைமாற்றியே வந்துள்ளன; எனவே சொத்து ஒரு சிலரிடம் குவியும்பட்சத்தில் அதன் உடன்நிகழ்வாக வர்க்கப்பகைமையும் குவிமையமாகிறது. ஆனால் பாட்டாளி



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கமானது சொத்துடமை வடிவத்தை மாற்றுவதை குறிக்கோளாக கொண்டதல்ல; சொத்து வர்க்க ஆதிக்கத்திற்கான கருவியாக இருத்தலை ஒழிப்பதாகும். இதன் விளைவாக வர்க்கங்களும் வர்க்கப்பகைமைகளும் மறைந்துவிடும். இந்தப் திருப்பணியை பாட்டாளி வர்க்கம் சூழலுக்கு தக்கபடி எதிர்காலத்தை தொலைநோக்கோடு கணக்கில் கொண்டு செய்வதற்கு வழிகாட்டியாகவே கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள்; சுருக்கமாகச் சொன்னால், பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்த வாதிகள் எனலாம்.

இந்த கம்யூனிஸ்டுகள், தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்தின் நலனை முன்னிட்டு, அந்தக் குறிப்பிட்டகட்டத்தின் சூழல்களை கணக்கில் கொண்டு குறிக்கோளை, திட்டங்களை இலட்சியமாக முன் வைக்கின்றனர். இலட்சியத்தை நோக்கி செயலாற்றகின்றனர். அதாவது தமது வர்க்கத்தினரை ஒரே அணியாக திரட்ட முயற்சிக்கின்றனர். இதில் வெற்றி பெறும் பட்சத்தில் நமது திட்டம் சரி என்றாகிறது. உ-ம். லெனினது ருஷ்யப்புரட்சி. அதே நேரத்தில் வெற்றிபெற்ற பின்னர் புதிய சூழல்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடுகிறது. எனவே இந்தப் புதிய சூழல்களுக்கு தக்கபடி திட்டங்களை உருவாக்க வேண்டும். இங்கும் உருவாக்கப்படும் திட்டமும் செயல்படுத்தப்படும் பட்சத்தில் வெற்றி பெற்றால் நமது திட்டம் சரி என்றாகும். மாறாக தோல்வி அடையும் பட்சத்தில் நமது திட்டம் தவறு என்று தான் ஆகும். தவறைக் களைய அந்தச் சூழல்களை மீண்டும் மீண்டும் கணக்கில் கொள்ள வேண்டும். நமது தவறுக்கான காரணங்களை உறுதி செய்ய வேண்டும்; அதை சோதனைக்கு உட்படுத்த வேண்டும் நமது அறிவுக்கு சரி எனப்படும்வரை, இலட்சியத்தை அடைய சரியான வழி என நம்பும் வரை எனலாம். ஆனால் மா-லெ வாதிகள் இன்னும் கூட 30 ஆண்டுகளான திட்டத்தை அடிப்படையில் சரி என்றே சொல்கின்றனர்; பல்வேறு குழுக்களாக மாறிய பின்னரும், ஏன், கட்சியாக ஒருங்கிணைவதே முதன்மையானது என வந்த பின்னரும் என்று நினைக்கும் போது எவ்வளவு தவறானது என்பது சொல்லாமலே விளங்கும்.

ருஷ்யப் புரட்சி வெற்றி பெற்றது; அதற்கு பின்னரான சூழல்கள் வேறுபட்டது. இதில் ஏற்பட்ட தவறுகளுக்காக, புரட்சியே தவறு எனச் சொல்ல முடியாது. ஏனென்றால் சூழல்களை கணக்கில் கொள்ளாமல் செய்யப்படும் முடிவாகும் இது. இவ்வாறு தான் கருணாமனோகரன் ருஷ்யப்புரட்சி பற்றி முடிவு செய்கிறார்.

மேலும் இங்கு இன்னொன்றும் காணத்தக்கது. குறிப்பிட்ட கட்டத்தில் செய்யப்படும் முடிவு, அதைச் செயற்படுத்துவதுவதற்காக கொடுக்கப்படும் அழுத்தம் காரணமாக மற்றைய முடிவுகளை தவறு எனக் காட்டும் முயற்சியின் விளைவாக எல்லாக் காலத்திற்குமான முடிவாக பின்பற்ற வேண்டும் எனும் கோரிக்கையாகவே செல்வாக்கு செலுத்துகிறது. ஆனபோதிலும் மாறிவரும் சூழல்களை கணக்கில் கொள்வோர். இதற்கு முந்தியவர்களின் கருத்துக்கள் செயல்கள் குறித்து கணக்கில் கொள்வோர். இதற்க முந்தியவர்களின் கருத்துக்கள் செயல்கள் குறித்து கணக்கில் எடுக்க வேண்டும்.அவர்களது கருத்து முடிவு அந்த குறிப்பிட்ட கட்டத்துக்கு மட்டுமே சரியானது. இதற்குமாறாக, அவர்களது முடிவு தவறாக இருக்குமா? இருக்காது, எனவே அவரது முடிவே இன்றும் பொருந்தக் கூடியது என்பது தவறானது என நிருபிக்கிறது. உ-ம். மார்க்சின் வழிமுறையை வளப்படுத்திய லெனினது ஏகபோக முதலாளித்துவம் என்னும் முடிவு எனச் சொல்லலாம்.

இதே போலவே லெனின் காட்டிய ஏகபோக முதலாளித்துவம் இல்லை; இது புதிய கட்டம் என்கிறார் கருணாமனோகரன் ஆனால் லெனினைப் போன்று வர்க்கப் போராட்டத்திற்கு வழிகாட்டவில்லை; மாறாக, தன்னால் வழிகாட்ட முடியாததை யாராலும்



படிப்பகம்

www.padippakam.com

முடியாது எனும் கருத்தாகவே எஞ்சிவிடுகிறது. இது எவ்விதத்திலும் மா-லெக்குழுக்கள் உட்பட முன் வைக்கும் கண்ணோட்டத்திற்கும் மேலான ஒன்றல்ல என்றாகிவிடும். ஏனென்றால் மா-லெக்குழுக்கள் இது லெனினிய சகாப்தம்; அவர் காட்டிய வழியே சரி; அதற்கு மாறானது எதுவும் சரியல்ல எனச் சொல்வதும் கூட தனிநபர் வழியாகவே எஞ்சிவிடும். ஆனால் கருணாமனோகரனோ இன்றைய யதார்த்த நிலைமைக்கு பொருந்தி வரக்கூடியதாக லெனினது வழி இல்லை என்பதால் அன்றைய கட்டத்திற்கும் அது தவறானது என்று மிகைப்படுத்தும் நிலைக்கு செல்கிறார்; இதுவும் கூட வரலாற்றில் தனிநபர் மீது வெறுப்பைக் காட்டுவதாகிறது

இவ்விருபோக்குகளையும் தர்க்கபூர்வமாகச் சொன்னால், ருஷ்யா பின்னடையக் காரணம் குருசேவ் என்பர் மா-லெ வாதிகள்; ஆனால் கருணாமனோகரனோ அதற்கும் மேலாகச் சென்று லெனின் தவறு என்கிறார். இவ்விரு போக்குகளும் குறிப்பிட்ட கட்டத்தின் தனிநபர்கள் மீதான விருப்பு, வெறுப்பு என்பதையே தனது அரசியல் திசைவழிக்கான அடிப்படையாக கொண்டுள்ளன. இவ்வாறான போக்கு குறித்து எங்கெல்ஸ் ஒரு முறை கூறினார். தனிப்பட்ட மனிதர்களின் விருப்பு, வெறுப்பை தனது கொள்கைக்கு அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சியின் எதிர்காலம் வருந்தத்தக்கதாகும் என்பதை கருணாமனோகரனும் சரி, மா-லெக்குழுவினரும் கணக்கில் கொண்டதாகத் தெரியவில்லை.

## முடிவாக ...

இதுகாறும் நாம் பார்த்தவற்றிலிருந்து சாரமாக நாம் கணக்கில் கொண்டால் மார்க்ஸின் பாயர்பாகிற்கு எதிரான கடைசி ஆய்வுரையை ஞாபகம் கொள்ளச் செய்கிறது. ஆய்வுரையாவது "இதுகாறுமான தத்துவஞானிகள் உலகை வியாக்கியானம் மட்டுமே செய்து வந்துள்ளனர்; ஆனால் இன்று மாற்றி அமைப்பதே கடமையாகும்" என்பார் இதற்கான விளக்கத்தை எங்கெல்சும், பிளெகானவும் அளித்துள்ளனர்.

ஆனால் கருணாமனோகரனோ கூறுகிறார். "இன்றைய உலகப்போக்கு எந்த சித்தாந்தத்துக்கும் அடங்காதது" என்கிறார். ஆகவே "எதிர்கால உலகப் போக்கு எந்த திசைவழியில் இருக்கும் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது" என்கிறார்.

அதாவது உலகை அறியவும் முடியாது; மாற்றவும் முடியாது என்பதாகிறது. இது மார்க்சிய தத்துவஞானத்திற்கு முந்தைய தத்துவஞானங்களின் சாரமாகிறது. இது மதபோதனை அடிப்படையில் உலகை வியாக்கியானம் செய்யவில்லையெனினும் மதபோதனையாகவே எஞ்சி விடுகிறது. ஆனால் மார்க்சிய தத்துவஞானமோ "உலகை அறிந்தால் உலகை நமது தேவைக்கு ஏற்ப மாற்றி அமைக்கலாம் என" மக்கள் திரள் உணர்வுக்கு ஊக்கமளிக்கிறது.

எனவே கருணா மனோகரன் முன் வைக்கும் கண்ணோட்டம் மார்க்சிய உலகப் பார்வை அல்ல. மேலும் "மனித வரலாற்றை தீர்மானிப்பது மனிதர்களே" என அவர் ஏற்றுக் கொண்டதும் பெயரளவுக்கான ஏற்பாகவே முன் நிறுத்துகிறார் எனவும் புரிந்து கொள்ள முடியும். சுருக்கமாகச் சொன்னால் கருணாமனோகரன் யதார்த்த சமுதாயத்தை மாற்றவியலாது; அதில் தன்னியல்பான சிறு மாற்றங்களை செய்தாலே போதும் என்றாகி விடுகிறது. இது புரட்சிகர பாட்டாளிகளின் நலனுக்கான வழிமுறை அல்ல; மாறாக முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்கானதே; அதன் சித்தாந்தவாதியே என கருணாமனோகரனை காட்டிக் கொடுத்துவிடுகிறது.

●



படிப்பகம்

www.padippakam.com

# 'எல்.ஜி யெஸ்'க்கு ஒரு கடிதம்

*அன்புதோழரே!*

தங்கள் கடிதம் கிடைத்தது. விபரம் அறிந்தோம். இக்கடிதம் பழைய சம்பவங்களை நினைவுபடுத்துகிறது. தாங்கள் 1989ம் ஆண்டு வாக்கில் 'சமரன்' ஆசிரியராக இருந்தீர்கள். அப்போது மா-லெ இயக்கம் குறித்து விமர்சனமாக பல கட்டுரைகள் எழுதி அனுப்பி இருந்தோம். அவற்றுக்கு பிறகு பதில் எழுதுகிறேன் என தெரிவித்து இருந்தீர்கள். காலம் உருண்டோடிவிட்டது. தாங்கள் இப்போது மா-லெ. இயக்கம் கொண்டிருக்கும் கருத்துக்களில் பலவற்றை நாம் அப்போதே காட்டி உள்ளோம். அவைகளை கிடப்பில் போட்டுவிட்டீர்கள். மேலும், தாங்கள் அறிந்தாலே உண்மை என்றபடி மா-லெ இயக்கம் குறித்த கருத்துக்களை கட்டுரையாக பொதுவுடைமையில் எழுதி உள்ளீர்கள். அதற்கு நாம் விமர்சனம் முன்வைத்துள்ளோம். தாங்கள் இதுவரை எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை (28.4.99 வரை)

மேலும் தங்கள் கடிதம் தெரிவிப்பது. உறவில் என்ன விமர்சனம் என்பது பற்றி இல்லாமல் இதற்கெல்லாம் பதில் அளிக்க வேண்டுமா? எனும் தொனி உள்ளது. இது சமுதாய மாற்றத்திற்காக நீண்ட நெடுங்காலம் பணியாற்றிய தாங்களா இவ்வாறு எழுதுவது! மா-லெ க்குழுக்களின் குறுங்குழுவாதத்தை எதிர்த்து புரட்சிகர கட்சியை கட்ட வேண்டும் என்னும் இலட்சியம் கொண்ட நீங்களா எழுதுவது! தாங்கள் பதில் எழுதாததை விட கடிதம் எழுதித் தான் வருத்தமடையச் செய்துள்ளீர்கள்.

புரட்சியாளர்கள் - பாட்டாளிவர்க்கத்தின் சித்தாந்தவாதிகள் எந்த ஒரு கருத்தையும் யார் சொல்கிறார்கள் என்பதைவிட அவர்கள் இந்தச்சூழலில் ஏன் அக்கருத்தை கூற வேண்டும்என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் மனிதனும்-அவனது சிந்தனையும் - கருத்துக்களும் சூழலின் விளைபொருளாகும். எல்லாச்சிந்தனையும் ஒன்றுபட்ட சிந்தனைக் கூறுகளை ஒன்றிணைப்பதில் தான் அடங்கி உள்ளது. அதுவும் பாட்டாளி வர்க்கச் சிந்தனையைக் கொண்டவர்கள் எந்த ஒருவருக்கும் கூடுதலான சலுகை-முக்கியத்துவம் அளிக்காமல் எதிர்கொள்ள வேண்டும். ஆனால் தாங்கள் அலட்சியப் படுத்தி உள்ளீர்கள். பொதுவுடமையில் கருத்து எழுதவில்லையெனினும் பதில் எழுதி அனுப்பி இருந்தால் உறவில் அப்படியே வெளிவந்து இருக்கும்.

மேலும், தங்களது கட்டுரைக்கான எமது விமர்சனம் உறவின் மூலம் தமிழகத்தில் பல வாசகர்களிடம் சென்று விட்டது. இனிமேலும் தாங்கள் எனக்கு நேரில் பதில் அளிப்பது சரியல்ல; ஏனென்றால், உறவின் வாசகர் ஒவ்வொருவரிடமும் தாங்கள் பேச வாய்ப்பு கிடைக்குமா? சாத்தியமா?

மேலும், 'உறவு'ன் விமர்சனத்திற்கு பதிலாக மா-லெக்குழு ஒன்று வெளியிட்டிருந்தால் அதற்கு முதன்மையாக முன்னுரிமை கொடுத்து இருப்பீர்கள். இது இயல்பே! என்றாலும் புரட்சியின் பால் பற்றுக் கொண்டவர்கள் தற்போது கட்சிகள்-குழுக்களில் இருப்பதை விட அதிகப்பற்று வெளியில் தான் உள்ளனர். இத்தருணத்தில் தனிநபருக்கும் எவ்வளவு முக்கியத்துவம் அளிப்பது தேவை என்பது சொல்லாமலே விளங்கும். விவாதத்தை முன் கொண்டு செல்ல வேண்டும். அதுவே இன்றைய தேவை. இங்கு லெனினது கூற்று நினைவு கூறத்தக்கது. "புரட்சியாளர் எந்த ஒரு கருத்தை ஆதரிப்பதிலும், எதிர்ப்பதிலும் முன்னோடியாக இருக்கவேண்டும்" இதை தாங்கள் கணக்கில் கொண்டதாக தெரியவில்லை.

எந்தவித தயக்கமும் இல்லாமல் தாங்கள் எவ்வாறு விமர்சனத்தை முன்வைத்தாலும் எதிர்கொள்வேன்! நமக்குள் எந்த வித உள்நோக்கமும் இல்லாமல் கருத்தை எதிர் கொள்வோம் . சமுதாய மாற்றத்திற்கான பணியை தொடர்வோம்!

நாள் : 28-04-99 நன்றி புரட்சிகர வணக்கங்களுடன்.

ஆசிரியர், உறவு



படிப்பகம்

www.padippakam.com

**உறவு தனி இதழ் : ரூ. 7-00**
**(தபால் செலவு தனி)**

**ஓராண்டு சந்தா : ரூ. 50-00**
**(தபால் செலவு உட்பட)**

"உறவு" ஐ பிறருக்கும் அறிமுகப்படுத்துங்கள்!

உங்கள் கருத்தை எழுதுங்கள்!!

வளர்ச்சிக்கு - உதவுங்கள்!!!

முந்தைய இதழ்களும் கிடைக்கும்
இதழ் எண் குறிப்பிட்டு எழுதுங்கள்

**கருத்துக்கள் / விமர்சனங்கள் / சந்தா**

அனைத்து தொடர்புக்கும்

**கா.சே. பாலசுப்பிரமணியன்**
6/5, கீழக் கொரட்டியார் வீதி, காரைக்குடி 630 001.
தொலைபேசி - 36765 (பீ.பீ)

படிப்பகம்

www.padippakam.com

# முந்தைய "உறவு" களில் வெளிவந்த படைப்புகள்

இதழ் - 1 : தாராளமயமாக்கலும் கம்யூனிஸ்டுகளும்

இதழ் - 2 : புரட்சிகரமான தத்துவம் மார்க்சியமா? பின் நவீனத்துவமா?

இதழ் - 3 : "மார்க்சிய லெனினிய இயக்கத்தில் நிலவும் மாபெரும் மூன்று நோய்கள்" - எல்.ஜி.எஸ்க்கு ஒரு எதிர்வினை

இதழ் - 4 : அ.மார்க்சின் - உடைபடும் புனிதங்கள், தேசியம் ஒரு கற்பிதம் - எதிர்வினை.

இதழ் - 5 : (அ) ம.ஜ.இ.க.விற்கு ஒரு கடிதம்

(ஆ) நந்தனின் பூர்வீக இனவாதமா? மார்க்சியமா?

இதழ் - 6 : (அ) அ. மார்க்ஸ் பற்றிய "உறவு" பார்வைக்கு சண்முகநாதன் விமர்சனமும் எமது பதிலும்

(ஆ) சிலப்பதிகாரத்தின் தனியார்மயமாக்கல் எதிர்ப்பும் 'உறவு'ன் விமர்சனமும்

(இ) 'சிலப்பதிகாரத்தின் இன்றைய தொழில்துறை குறித்து நிலைப்பாடும்" உறவு-ன் விமர்சனமும்.

✓ பாண்டியன் கணினி அச்சு, மதுரை-1. ✆ 746927

படிப்பகம்